Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | சித்திரை-20 | 03-05-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை -74

S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11455)

# இல. விவகாரத்தில் பாக். இன் அக்கறை

# இந்தியத் தரப்பு தீவிர பரிசீலிப்பு

## இந்திய வெளியுறவுச் செயலர் தமது அதிகாரிகளுடன் ஆராய்வு

**இலங்கை விவகாரத்தில் பாகிஸ்தானின் அக்கறை அண்மை நாட்களில் அதிகரித்து வருவது குறித்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம்சரன் தனது சக அதிகாரிகளுடன் விரிவாக ஆராயந்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

என்றுமில்லாதவாறு பாகிஸ்தான் இலங்கை விடயத்தில் கூடுதல் அக்கறைகாட்டி வருவதன் பின்னணி குறித்துக் கூடுதல் அக்கறை செலுத்துமாறு இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இலங்கைக்கு எந்தவிதமான உதவிகளையும், எந்த நேரத்திலும் வழங்குவதற்கு பாகிஸ்தான் தயாராக இருப்பதாக பாகிஸ்தானிய தூதுவர் அண்மையில் கூறியிருந்த கருத்துக் குறித்தும் இந்தியத்தரப்பு அதிக கவனம் செலுத்தி வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பிராந்தியத்தின் மிக முக்கிய நாடாக இந்தியா இருக்கின்றபோதிலும் இலங்கை விடயத்தில் அதன் தலை யிடாததன்மை காரணமாக ஏனைய நாடுகள் இலங்கை விடயத்தில் தலையிடும் நிலைதோன்றியுள்ளதாகவும் விரைவில் இந்தியா தனது இலங்கை தொடர்பான புதிய நிலைப்பாடு குறித்து உத்தியோக பூர்வ அறிவித்தலை வெளியிடலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## வாகரை அரசியல் பணிமனை மீதான தாக்குதல் முயற்சி முறியடிப்பு

### வாகரை அரசில்துறைப் பொறுப்பாளர்

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனை மீது தாக்குதல் நடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.நேற்று முன்தினம் இரவு 12.10 அளவில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக வாகரை அரசியல்துறைப் பொறுப்பாளர் கமல் தெரிவித்தார் எனினும் தமது போராளிகள் முன்னரே தாக்குதல் நடத்த வந்தவர்களை இனங்கண்டு கொண்டமையால் அவர்கள்தப்பியோடி விட்டதாகவும் கமல் குறிப்பிட்டார்

## த.பு.கழக இயக்குனர் இராணுவத்தால் கைது

### –பெருந்தொகைப்பணம் வைத்திருந்தாராம்

மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழக இயக்குன்ர் ஜோய் பிரான்க்கும், அவரது சாரதியும் நேற்று சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணம்செய்த வாகனத்தில் சுமார் இரண்டு கோடி ரூபா இருந்தமை தொடர்பாகவே இக்கைது இடம்பெற்றது. பின்னர் இவர்கள் மன்னார் சிறிலங்க பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் இவ்வளவு பணம் எதற்காக கொண்டு செல்லப்படுகிறது எனப் பொலிசார் கேட்டதற்கு புனர்வாழ்வுக்கழகக் கிளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக கொண்டு செல்லப்படுவதாக ஜோய் பிரான்க் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் சிவராமிற்கு கிளி.யில் நினைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

படுகொலை செய்யப்பட்ட இராணுவ அரசியல் ஆய்வாளரும், பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் அவர்களின் நினைவு நிகழ்வும், கண்டனக் கூட்டமும் நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 4.00 மணிக்கு வெளிச்சம் ஆசிரியர் கருணாகரன் தலைமையில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து பேண இரு தரப்பினரதும் அர்ப்பணிப்புத் தேவை

### –கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹொக்லண்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் பேணுவதற்கு இருதரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கை நீண்டகாலமாக கடைப்பிடிக்கப்படுவதால் மீண்டும் யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் எவருக்குமில்லையென்று அவர் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி உலக சேவையின் ஏ.சி.யாருடே நிகழ்ச்சிக்குக் கருத்துத் தெரிவித்தபோதே ஹொக்கலண்ட் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் நடைமுறையிலுள்ளது. சில சில சந்தர்ப்பங்களில் கொலைச் சம்பவம் தொடர்பாக தகவல்கள் பதிவாகின்றன. சம்பந்தப்பட்ட தரப்பினரின் அர்ப்பணிப்பினால் யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வருகின்றதெனக் கூறமுடியாது. போர்நிறுத்த உடன்படிக்கையைப் பேணுவதற்கு இரண்டு தரப்பினரதும் ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுச்

12 ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரம் மோதி குடும்பப் பெண் பலி

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் நேற்று மாலை 5.00 மணிக்கு இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பப்பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

மாவீரர் படிப்பகத்திற்கு அருகில் உள்ள சிறு வீதியில் இவ்விபத்து இடம்பெற்றது. சிறு வீதியால்சென்ற உழவு இயந்திரம் ஒன்று குடும்பப் பெண் மீது மோதியுள்ளது.

முத்தையன்கட்டைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ரவீந்திரன் சுகிர்தா என்பவரே பலியானவராவார்.

இந்த விபத்துத்தொடர்பான விசாரணைகளைப் புதுக்குடியிருப்புத் தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனா. (08)

## சிவராமிற்கு ரணில் அஞ்சலி

(கொழும்பு)

மாமனிதர் சிவராமின் பூதவுடலுக்கு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அஞ்சலி செலுத்தினார்.

நேற்று முன்தினம் பூதவுடல் அவரது இரத்மலான இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த சமயம் அங்கு சென்றுஅவர் தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

## மாமனிதர் சிவராம் புகழுடலுக்கு பல தரப்பும்அணிதிரண்டு அஞ்சலி

### –ஆலையடிச்சோலை மயானத்தில் நல்லடக்கம்

சிறிலங்காத் தலைநகர் கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட பிரபல ஊடகவியலாளர், அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் புகழுடல் நேற்று மாலை மட்டக்களப்பு ஆலையடிச் சோலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு எடுத்துவரப்பட்டு அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக புகழுடல் வைக்கப்பட்டிருந்தபோது பெருந்திரளான மக்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் எனப் பல்வேறு தரப்பினைச் சேர்ந்தவர்களும் திரண்டு வந்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். அதன் பின்பு முற்பகல் 11.00 மணிக்கு விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரால் பொறுப்பேற்கப்பட்டு வவுணதீவுப் பாலம் ஊடாக அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கரடியனாற்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு தேனகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு புகழுடலுக்கு தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### தவறவிடப்பட்டது

2005.04.14 நாள் வருடப்பிறப்பு அன்று மல்லாவி மக்கள் வங்கியில் வைத்து கைச்செயின் ஒன்று தவறவிடப்பட்டது.இதைக் கண்டெடுத் தவர்கள் மல்லாவி மக்கள்வங்கியில் ஒப்படைக்கவும்.அல்லது தகவல் தெரிந்தவர்கள் வங்கியில் அறிவிக்கவும்.தகுந்தசன்மானம் வழங்கப்படும். (5843)

### தவறிவிட்டது

காணிபோமிற், 2கடிதம் பரந் தனுக்கும் புளியம் பொக்கணைக்கும் இடையில் காலை 10 மணியளவில் சொப்பின் பையுடன் தவறவிடப் பட்டுள்ளது. இதனை கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது புலிகளின்குரல் நடுவப் பணியகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (6096)

### தவறிவிட்டது

இராசதுரை விஜயசாந் வயது 28 என்பவருடைய தேசிய அடையாள அட்டைஇல.780240814-V ஓட்டுநர் உரிமம் Bankகாட்,சிம்காட் கொண்ட பேஸ்என்பன வட்டக்கச்சிப் பாட சாலைக்குஅருகில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப் படைக்கும்படி தாழ்மையுடன வேண்டுகிறேன். (சி.11835)

### தவறிவிட்டது

முகமாலைக்கும், புதுக்குடியிருப் புக்கும் இடையில் ந.விக்கினேஸ் வரன்- 730253370-V என்ற அடையாள அட்டையும், அலுவலக அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண் டெடுத்தவர் வலயக்கல்விப் பணி மனை,புதுக்குடியிருப்பில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் கவும் தகுந்த சன்மானம் வழங் கப்படும். (5846)

### விற்பனைக்குண்டு

இரணைப்பாலை வீதி, சிவநகர், 7 ஆம் வட்டாரத்தில் தென்னம் பிள்ளைத்தோட்டம்1/3ஏக்கர் விற் பனைக்குண்டு தொடர்பு கொள் ளவும்.7ஆம்வட்டாரம்புதுக்குடியிருப்பு வே.சுப்பிரமணியம். வாங்கவிரும்புப வர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (5842)

### தவறிவிட்டது

செல்வி.தாட்சாயினி செல்வச் சந்திரன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை, பயண அனுமதிஅட்டை,சிறு குறிப்பேடு என்பன அடங்கிய சிறு பேஸ் 2005.04.30 அன்று தருமபுரத்திற்கும், வள்ளிபுனத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தேவிபுரம் கண்ணன் மருத்துவ மனையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின் றேன்.தகவல்:- செ.தட்சாயினி, வள்ளிபுனம். (5845)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்- சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### விஞ்ஞான பீடம் நாளைஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் 2004/2005 ஆம் கல்வி யாண்டில் கற்க அனுமதிக்கப்பட்ட வர்கள் உட்பட அனைத்து மாணவர் களுக்குமான கல்விச் செயற்பாடுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படிநாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என விஞ்ஞான பீடாதிபதி அறிவித்துள்ளார். மாணவர்கள் அனைவரையும் குறித்த நேரத்திற்கு விஞ்ஞான பீடத்திற்கு வருமாறு அவர் கேட்டுள்ளார். (சு)


## பணி நிலை வேண்டுகை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்
பதிவு இல. L 85305

C.H.C

### 01.பணிநிலை : உளவளத்துணையாளர்

- அனுபவம் → உளவளத்துணைச் சேவையில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.
- தகைமை → உளவளப்பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவராக இருத்தல்வேண்டும்.
- கல்வித்தகைமை → க.பொ.த (சா.த)ரப் பரீட்சை சித்தியடைந் தவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் → நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

### 02.பணிநிலை : நிர்வாக அலுவலர்

- அனுபவம் → நிர்வாக அலுவலராக ஏனைய நிறு வனங்களில் பணியாற்றி ஐந்து வருடத் திற்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கல்வித்தமைமை → க.பொ.த(உ.த)ரம் கற்றவராக இருத்தல்வேண்டும்
- சம்பளம் → நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

### 03.பணிநிலை : மொழிபெயர்ப்பாளர்

- அனுபவம் → இரண்டு வருடங்கள் இத்துறையில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ்,ஆங்கிலம், சிங்களம், எழுதவாசிக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
- கல்வித்தகைமை → க.பொ.த(உ.த)ரப் பரீட்சை சித்தியடைந் தவராக இருத்தல்வேண்டும்.
- சம்பளம் → நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 15.05.2005**

(சி.11836)


# யாழ்.இல் வடிகால்கள் சீரின்மையால் சுகாதாரப் பிரச்சினைகள் அதிகரிப்பு

## யாழ்.மாநகரசபை ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரப்பகுதிகளில் உள்ள வடிகால்களின் சீரற்ற தன்மைகள் காரணமாக இங்கு பாரிய சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படுவதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித் துள்ளார்.

யாழ்.நகரப் பகுதிகளில் உள்ள வடிகால்களின் நிலைமைகளைப் பார்க்கும்போது ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில்அமைக்கப்பட்ட எட்டுப் பிரதான வடிகால்களைத் தவிர வேறு எந்த வடிகால்களும் நகரக்கழிவு களைப் பாய்ச்சுவதற்கான சிறந்த அமைப்புடன் காணப்படவில்லை.

இதனால் பிற்காலங்களில் அமைக்கப்பட்ட வடிகால்கள் மூலம் சிறந்த முறையில் கழிவுகளை பாய்ச்ச முடியாத நிலைமை உள்ளது. இதனால் கழிவு நீர் தேங்கி நின்று பெரும் சுகாதாரப்பிரச் சினையை ஏற்படுத்தி வருகின்றது.

எனவே யாழ்.நகரில் உள்ள ஒல்லாந்தர் கால கழிவுவாய்க்கால்கள் தவிர்ந்த ஏனைய வடிகால்கள் சிறந்த திட்டமிடலுடன் மீண்டும் மறு சீரமைக்கப்பட்டாலே யாழ்.நகரப் பகுதியில்எழும் பிரதான சுகாதார பிரச் சினைகளுக்கு தீர்வு காண முடியும் என யாழ்மாநகரஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# யாழ்.இல் 116 தபாலகங்களுக்கு தொலைபேசி வசதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 116 தபாலகங்கள் தொலைத்தொர்டர்பு வசதிகள் அற்றநிலையில் இயங்கி வருவதாக யாழ்.மாவட்ட பிரதம தபாலக தகவல்கள் தெரிவிக் கின்றன.

இவ்வாறு தொலைத்தொடர்பு வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவரும் தபாலகங்களில் 108 உபதபாலகங்களும், எட்டுத் தபால கங்களும் அடங்கும்.

இவற்றில் பல தபாலகங்களுக்கு தொலைபேசி இணைப்புகளை வழங் கக்கோரி நீண்டகாலமாகி விட்ட போதும் கூட இணைப்புகள் வழங்கப் படவில்லை.

இதனால் இத்தபாலகங்களின் செயற்பாடுகளில் பெரும்பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரி விக்கின்றனர். இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள 22 தபாலகங் களுக்கும் 32 உபதபாலகங்களுக்கும் மாத்திரமே இது வரைதொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக பிரதம தபாலகத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (33)

## 30 கணினிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின நவீனமயமாக்கலுக்காக யுனெஸ்கோ அமைப்பினால் இது வரையில் 30 கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருப்பதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் க.குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பொதுசனநூலகத்தை உலகளாவியரீதியில் உள்ள சர்வதேசத்தரம் வாய்ந்த நூலகங் களுடன் வலை அமைப்பினூடாக இணைத்துக் கொள்வதற்கான முன்னோடி நடவடிக்கைளுக்காகவே இவை வழங்கப்பட்டிருப்பதாக குணராஜா மேலும் தெரிவித்தார். (33)

## 85 வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் 85வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு உலக வங்கி முன் வந்துள்ளது.

கடந்த காலயுத்த அனர்த்தங் களால் பாதிக்கப்பட்டவர்களதும் அங்கவீனர்கள், விதவைகள் ஆகியோரை தலைமைத்து வமாகக் கொண்ட குடும்பங்களதும் நலனை கவனத்தில் கொண்டு இவை அமைக்கப்படவுள்ளன. (33)

## "யுனெஸ்கோ"வின் நிதியுதவியுடன் கலாச்சார மண்டபம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யுனெஸ்கோ அமைப்பினது நிதி உதவியுடன் யாழ்.மாவட்டத்துக்கான கலாச்சாரமண்டபம் ஒன்று யாழ். நகரப்பகுதியில் அமைக்கப்பட வுள்ளது.

திராவிடக்கட்டடக்கலை அம்சங் களைச் சித்திரிக்கும் சிற்ப, சித்திர ஓவிய, கட்டடக்கலைப் பாணிகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ள இக்கலாச்சார மண்டபத்தை தலைமையகமாகக் கொண்டு யாழ்.மாவட்ட கலாச்சாரப் பேரவை ஒன்றும் நிறுவப்படும். இதற்கான தொழில்நுட்ப மற்றும்நிதி உதவிகளை யுனெஸ்கோ அமைப் பினர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் இக்காலாச்சார மண்டபத்தில் தமிழ்க்கலைஞர்களது கலைவடிவங்களை வைத்துப் பேணு வதற்கும்,கலைஞர்களை ஊக்கு விப்பதற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளனர். (33)

## பாதிக்கப்பட்ட புனிதநகர் மக்களுக்கு சமூக பொருளாதார நிறுவனம் உதவி

(கற்கோவளம்)

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட பருத்தித்துறை கற்கோவளம் புனித நகர் பகுதியைச் சேர்ந்த 43 குடும்பங்களுக்கு33 புதிய கிணறுகள் நிர்மாணிக்கவும், பத்துப் பழைய கிணறுகளைத் திருத்திய மைக்கவும் பணம் மற்றும் பொருட் கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி சுனாமிஅனர்த்த இணைப்பாளர்க.பாலையா தலை மையில் இந் நிகழ்வு கடந்த சனிக் கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர் மு.சிவனேசனும் மற்றும் வடமராட்சிஅரசியல் துறைப் பொறுப் பாளராக இன்பன், தமிழர் சமுக பொருளாதார அபிவிருத்தி நிறுவன செயலாளர் சு.விவேகானந், யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.தவச் செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (41)

## தண்டப் பணம் விதிப்பு

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதே சத்தில் சட்டவிரோதமாக மின்சார இணைப்பைப் பெற்றதற்காகப் பொலிசாரால் ஐவர் கைது செய்யப் பட்டு மன்னார் [illegible]தில் நீதிபதி முன்னி லையில் ஆய[illegible]படுத்தப்பட்டு 5000 முதல்10,000 ரூபாவரை தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (18)


## United Nations World Food Programme SriLanka

### VACANCY ACCOUNCEMENT DRIVERS

World food programme (WFP), the food aid organization of the United Nations is seeking applications from the qualified sri Lankan national candidates to fill thedriver position for the WFP sub-office in Mullaithivu and Kilinochchi.

Selected candidates will be given an initial 3 months contract based on the emergency operational needs. Extension of contract will be made based on performance of the staff member and the requirement of the post.

Remunera ion wil be based on the UN Local Salary structure for the UN staff in Sri Lanka.

APPlications along With a detailed CV should be addressed to the Head of Office, World Food programme, 155th Mile post, Kandy Road, kilinochchi .FaxNo:021-2222086. The deadline for submission of application is 10May 2005.

Only short-listed candidates will be contacted.

WFP is the world's Largest humanitarion agency. In 2003, WFP fed nearly 110 million people in 82 countries including most of the world's refugees and internally displaced people. WFP has been providing food assistance to the Government of Sri Lanka since 1968 . WFP has started a large scale food- assistance programme for 750,000. Tsunami Victims in Sri Lanka during next 3-6 months.

(சி.6097)

# பிரிட்டனில் நாளை மறுதினம் பொதுத் தேர்தல் மூன்றாவது முறையாக பிரதமராவார் பிளேயர்?

(லண்டன்)

**பிரிட்டன் பிரதமராக மூன்றாவது முறையாக டொனி பிளேயர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று சண்டேரைம்ஸ் நாளேடும். யூகௌவ் நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளன.**



இது குறித்து சண்டே ரைம்ஸ் கூறியுள்ளதாவது:-

659 உறுப்பினர் கொண்ட பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை விட 90 முதல் 100 வரை அதிக இடங்களைக் கைப்பற்றி பிளேயர் மீண்டும் பிரதமராவார்.

டொனி பிளேயர் லேபர் கட்சிக்கு 37 சதவீதமும், கன்சர்வேடிவ் கட்சிக்கு 34 சதவீதமும், லிபரர் டெமாக்ரஸ் கட்சிக்கு 21 சதவீத வாக்குகளும் கிடைக்கும் இது தொடர்பான ஆய்வை பிளைமௌத் பல்கலையில் தேர்தல் மையத்தின் பேராசிரியர்கள் காலின் ரேலிங்ஸ், மைக்கேல் திராஷர் ஆகியோர் நடத்தினார்.

தேசிய அளவில் பிளேயர் கட்சிக்கு ஆதரவாக வீசி வரும் அலையால் 96 இடங்கள் பெரும்பான்மை கிடைக்கும். மூன்றாவதுமுறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அமைச்சரவையை மாற்றியமைப்பதில் பிளேயர் கவனம் செலுத்துவார் எனக் கூறப்படுகிறது.

வரும் வியாழக்கிழமை தேர்தல் நடைபெறுகின்றது. தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாளே அமைச்சரவையில் மாற்றம் செய்யப் பிளேயர் திட்டமிட்டுள்ளார்.

# சீனாவில் தனியார் துறையில் தொழிற்சங்கத்திற்கு இடமில்லை

(பீஜிங்)

கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி புரியும் சீனாவில் தனியார் துறையில் தொழிற்சங்கங்களுக்கு இடமில்லை என்ற நிலை உருவாகி யுள்ளது.

சீனாவில் வளர்ந்து வரும் தனியார் துறையிலும், வெளிநாட்டு நிறுவனங்களான வால் மார்ட், மக்டொனால்டு, கே எப்சி போன்ற வற்றிலும் தொழிற்சங்கங்கள் என்ற பேச்சே இல்லை.

அரசுசாராத இந்த நிறுவனங்களில் பணியாற்றுவோர் தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லை என்பது சீனாவின் பிரதான தொழிற்சங்கமான அனைத்து சீன தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (ஏ.சி.எப்.டியு) பெரிதும் கவலையடையச் செய்துள்ளது. இந்தக் கூட்டமைப்பு தோன்றி இந்த மே தினத்துடன் 80 ஆண்டுகள் ஆகின்றன. சீனாவில் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் பத்து கோடி பேர் வேலை செய்கின்றனர்.

இவர்களில் பெரும் பகுதியினர் தொழிற்சங்கத்தில் இல்லை என்கிறார் ஏ.சிஎப்.டி.யு சங்கத்தின் துணைத் தலைவர் பொங்ஜூஞ்சியு.

## தங்கையைக் காக்க சிங்கத்துடன் போராடிய எட்டுவயதுச் சிறுவன்

சிலியில் ஆன்டோ என்ற நகரில் எட்டுவயதுச் சிறுவன் ஜான், தனது இரண்டு வயதுத் தங்கையுடன் மிருக்காட்சிச்சாலைக்கு சென்றான். சிங்கம் அடைத்து வைத்திருந்த கூண்டு அரகே சென்றபோது திடீர் என்று சிங்கம் கூண்டைவிட்டு வெளியேறிவிட்டது. இரண்டு வயதுக் குழந்தையைத் தாக்க சிங்கம் பாய்ந்தது. உடனே சிறுவன் ஜான், கைகளால் சிங்கத்தின் தாடையில் பலமாகக் குத்தி அதை மீண்டும் கூண்டுக்குள் விரட்டினான். சிறுவனின் அபார திறமையை அங்கு கூடிவிட்டவர்கள் பாராட்டினார்கள்.



தாய்லாந்தில் உள்ள நகான் பிரதாம் நகரில் 'குண்டுப் பெண்களுக்கான அழகிப் போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. இந்தப் போட்டியில் 182 கிலோ எடை கொண்ட தன்சனாக் மெக்கீவ் (வயது-25)'குண்டு ராணியாக அறிவிக்கப்பட்டார்.

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு இடம்; பார்த்துப் பயப்படவில்லையென்கிறார் -ரைஸ்

(வோஷிங்டன்)

"ஐ.நா. பாதுகாப்புச் சபையில், இந்தியா இடம்பெறுவதால் அமெரிக்காவுக்கு அச்சம் ஏதும் இல்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இப்போது ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளாக அமெரிக்கா ,இங்கிலாந்து, பிரான்ஸ். சீனா, ரஷ்யா ஆகியவை உள்ளன.

பாதுகாப்புச் சபையின் பலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. அப்படி எண்ணிக்கையை உயர்த்தும் போது எங்களுக்கு இடம் வேண்டும் என்று இந்தியா கோரியுள்ளது. இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி தர பல்வேறு நாடுகளும் ஆதரவு அளித்துள்ளன.



இந்தியா தவிர பிரேசில்,ஜப்பான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும் நிரந்தர உறுப்பினர் பதவி கோரியுள்ளன.இந்த நிலையில் பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவது பற்றி அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் கொண்டலிசா ரைஸ்,பிரேசில் நாட்டு பத்திரிகை ஒன்றுக்குப்பேட்டி அளித்துள்ளார்.அதில் அவர், கூறியிருப்பதாவது:-

ஐ.நா பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவது பற்றி நாங்கள் பரிசீலித்து வருகிறோம். இதில் இந்தியா இடம்பெறுவது குறித்து எங்களுக்கு எந்த ஆச்சரியமுமில்லை.

பாதுகாப்புச் சபை விரிவுபடுத்தப்படுவதால், அது பலவீனமாகிவிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை.

21ஆம் நூற்றாண்டுக்கான பிரச்சினைகளைச் சமாளிக்கும் விதத்தில் ஐநா. நவீனப்படுததப்பட வேண்டும்.

இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் உலக சக்திகளாக உருவாகி இருக்கின்றன. அவை ஐ.நா பாதுகாப்புச்சபையில் இடம்பெறுவதைப்பார்த்து நாங்கள் அஞ்சவில்லை.அந்த நாடுகளும் எங்களைப் போல சனநாயக நாடுகள்தான். அதனால் அவை நிரந்தர உறுப்பினர்களாவது நல்லதுதான் இவ்வாறு ரைஸ் கூறினார்.

# நிறுத்தப்பட்ட பொருளாதார உதவி; மீண்டும் வழங்க ஜப்பான் தயார் — கொய்சுமி



1998 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணுகுண்டுப் பரிசோதனையை நடத்தியதால் ஜப்பானால் நிறுத்தப்பட்ட பொருளாதார உதவிகளை மீண்டும் வழங்குவதற்கு தமது நாடு இணங்கியிருப்பதாக அங்கு விஜயம் செய்த ஜப்பானியப் பிரதமர் ஜூனிசிரோ கொய்சுமி தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக 154.9 மில்லியன் டொலர்களை அது கடனாக வழங்கும். பெரும்பகுதி பஞ்சாப்பில் நீர்ப்பாசனக் கால்வாய்களைப் புனரமைப்புச் செய்வதற்கே வழங்கப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு மட்டு மன்றி இந்தியாவுக்கு அதே ஆண்டு அணுகுண்டுப் பரிசோதனை நடத்தியதற்காக ஜப்பான் பொருளாதாரத் தடையை,விதித்திருந்தது. எனினும் 2001 ஆம் ஆண்டு ஜப்பான் இந்தியாவுக்கு அனுமதியளித்தது.

ஜப்பான் பிரதமர் கொய்சுமி இந்தியாவிலிருந்து ஒருநாள் விஜயம் மேற்கொண்டு பாகிஸ்தான் வந்தடைந்தார் இவர் இரு நாட்டுப் பிரதமர்கள் முசாரவ். மன்மோகன்சிங் ஆகியோரிடம் பேச்சுக்களை நடத்தியுள்ளார். பாகிஸ்தானில் அவர் சந்திப்பை முடித்துக் கொண்டு செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில், உறவுகளை தாம் மீளப் புதுப்பிப்பது தொடர்பாகத் தீர்மானித்ததாகவும் இது இரு நாடுகளிற்கிடையிலும் நெருங்கிய நட்பைப் பேணும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் பாகிஸ்தானின் இரண்டு நீர்ப்பாசனத் திட்டங்களிற்கு 79.24 மில்லியன் டொலர் உதவி வழங்க உடன்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது நான்கு வருடங்களிற்கு முன்னார் ஜப்பானால் பாகிஸ்தானிற்கு 300 மில்லியன் டொலர் உதவி வழங்குவதான வாக்குறுதியின் ஒரு பகுதியாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீர் பிரச்சினை தீரும் வரை ஐ.நா.விலகக் கூடாது-பாகிஸ்தான்

(இஸ்லாமபாத)

காஷ்மீர் பிரச்சினை தீரும் வரை காஷ்மீர் எல்லையில் இரு புறமும் உள்ள ஐ.நா கண்காணிப்பாளர்களை நீக்கக் கூடாது என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஆக்கிரமிப்புக் காஷ்மீரில் பணியாற்றி வரும் ஐ.நா கண்காணிப்பாளர்களின் எதிர் காலப் பணிகள் குறித்து இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுடன் ஆலோசனை நடத்தப்படும் என்று பாகிஸ்தான் வந்துள்ள ஐ.நா பொதுச்செயலர் கொபிஅனான் கூறினார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக மேற்கண்டவாறு கூறினார். பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் ஜலீல்அப்பாஸ் ஜிலாணி. இரு புறத்திலும் சேர்த்து 44 ஐ.நா கண்காணிப்பாளர்கள் பணியாற்றி வருகின்றனர். வோஷிங்டன் ஐ.நா பாதுகாப்புச்சபை விரிவுபடுத்துவது குறித்தும் 21 ஆம் நூற்றாண்டின் பிரச்சினைகளைச் சமாளிப்பது குறித்தும் ஆய்வு நடத்தப்படும் என்று அமெரிக்கா கூறியுள்ளது

# நேபாளத்தில் இயல்பு நிலை திரும்பவில்லை மேதினப் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் நெருக்கடி நிலை விலக்கப்பட்ட போதிலும், அங்கு இயல்பு நிலை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தொழிலாளர் தினத்தையொட்டி ஞாயிற்றுக்கிழமை பேரணிகள் நடத்த அனுமதிக்கப்பட வில்லையெனவும். நாடெங்கும் குறிப்பாக தலைநகர் காத்மண்டுவில்பெருமளவில் இராணுவத்தினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொண்ட மன்னர் ஞானேந்திரா உடனடியாக நெருக்கடி நிலையை அறிவித்தார்.

இதற்கு பல்வேறு நாடுகள் கொடுத்த நெருக்கு தலை அடுத்து நெருக்கடி நிலையை திரும்பப் பெறுவ தாக வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

ஆனால் நேபாளத்தில் நிலைமை இன்னும், இயல்புக் குத் திரும்பவில்லை. நெருக்கடி நிலை விலக்கிக் கொள்ளப் பட்டாலும், கடும் கெடுபிடிகள் தொடர்ந்து கொண்டிருப்ப தாக பல்வேறு கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். பத்திரிகைகளுக்கான தணிக்கை தளர்த்தப்படவில்லை. சிறைப்படுத்தபட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்று பல்வேறு அரசியல் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## தங்கை-காதலியுடன் சேர்ந்து எகிப்தில் தாக்குதல் மூன்றுபேர் பலி

வெளிநாட்டுப் பயணிகளைக்குறிவைத்து ஒரு தீவிரவாதியும், அவரது தங்கையும், காதலியும் தாக்குதல் நடத்தியதில் மூன்றுபேர்கொல்லப்பட்டனர். ஏழுபேர் காயமடைந்தனர்.

இஸ்லாமிய நாடான எகிப்திலும் தீவிரவாதம் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.அந்த நாட்டின் தலைநகர் கெய்ரோவில் உள்ள அருங்காட்சியகத்துக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளைத் தாக்கும் நோக்கத்தோடு, ஒரு தீவிரவாதி உடலில் கட்டி இருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தான். இதில் ஒருவர் பலியானார்.

இது நடந்த சிறிது நேரத்தில் அருங்காட்சியகம் அருகே நிறுத்தப்பட்ட சுற்றுலாப் பேருந்தை நோக்கி பர்தா அணிந்த இரண்டு பெண்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் இரண்டு பேர் பலியானார்கள். ஏழு பேர் காயமடைந்தனர்.துப்பாக்கியால் சுட்ட இரண்டு பெண்களில் ஒருவர் தீவிரவாதி யாசினின் காதலி. இன்னொருவர் அவர் தங்கை என தெரிவிக்கப்படுகிறது.








# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை

# சர்வதேசத்திற்கு உணர்த்திய மேநாள் நிகழ்வுகள்!

**-தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு**

**தமிழ்த்தேசியம் வலுப்பெறவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டினை அனைத்துலக அரங்கிற்கும் எடுத்தியம்பும் வகையிலும் தமிழ்மக்கள் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளில் மேநாள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் எழுச்சியுடன் பங்கேற்றனர்.**

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் தமிழ் மக்கள் கலந்து கொண்ட மாபெரும் எழுச்சிப் பேரணி நடைபெற்றது.

தமிழ்த் தேசியம் வலுப்பெறவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டினை அனைத்துலக அரங்கிற்கு எடுத்தியம்பும் வகையிலும் நடைபெற்ற இப் பேரணியில் இரண்டாயிரம் வரையிலான தமிழ்மக்கள் பங்கேற்றனர். தமிழர் தேசியம், தாயகம், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை ஆகியன அங்கீகரிக்கப்படல் வேண்டும். இடைக்கால நிர்வாகம், ஆழிப் பேரலையால் அழிவுக்குள்ளான தமிழர் தாயகப்பிரதேசத்தின் மீள்கட்டமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதோடு தமிழ்மக்களின் இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு, சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பதாகைகள் இப் பேரணியில் தாங்கிச் செல்லப்பட்டன.

அத்தோடு கடந்த வெள்ளியன்று சிங்கள இனவாதக் கயவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு, மிருகத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழினத்தின் தலைசிறந்த சர்வதேச ஊடகவியலாளர் சிவராம் (தராகி) அவர்களின் படுகொலைக்கான கடும் கண்டனமும் நோர்வே தமிழ் மக்களால் இப்பேரணியில் வெளிப்படுத்தப்பட்டது.

துணிச்சல் மிக்க ஊடகவியலாளனை சிறிலங்கா அரச பயங்கரவாதம் கொன்றழித்துவிட்டது, தமிழினம் ஆற்றல்மிகு எழுத்தாளனை, சமூகவியலாளனை இழந்து நிற்கின்றது. இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளை சிறிலங்கா அரசாங்கம் நிறுத்த வேண்டுமென சர்வதேச சமூகம் கடும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்றும் இவ்வாறு தொடர்ந்து சமாதான காலத்திலும் தமிழ் ஊடகவியலாளர்களை படுகொலை செய்வதன் மூலம் சிறிலங்கா அரச இயந்திரம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை நசுக்க முனைகின்றது ஆகிய வாசகங்கள் பேரணியில் வலியுறுத்தப்பட்டன. மேலும் பர்கன், ஸ்தவாங்கர், துரைண்கைம் ஆகிய நோர்வேயின் பிற பிரதான நகரங்களிலும் தமிழ்மக்கள் கலந்துகொண்ட மேநாள் எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றன. தமிழ்மக்களின் போராட்டத்தின் உண்மைகளை நோர்வேஜிய மக்களுக்கு எடுத்தியம்பும் நோக்கில் நோட்டம் (NOTAM ) நோர்வேஜிய மொழியில் உருவாக்கப்பட்ட சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. இந்த இதழ் கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மே நாள் வெளியீடாக வெளியிடப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை உலகத் தொழிலாளர் நாளான நேற்று முன்தினம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் தமிழ் மக்கள் கலந்து கொண்ட மாபெரும் எழுச்சிப் பேரணி நடைபெற்றது.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் எனும் கோசம் ஓங்கி ஒலித்தது. குடியரசு சதுக்கத்திலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் நேசன் எனுமிடத்தில் சென்று முடிவுற்றது. இந்த எழுச்சி மிகு ஊர்வலத்தில் தமிழ்த் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு இந்நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தது. சர்வதேச ரீதியாக தமிழ்மக்களின் இனப் பிரச்சினையை வெளிக்கொணர்வதில் முன்னின்று உழைத்த ஊடகவியலாளரான டீ.சிவராம் அவர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலையைக் கண்டிக்கும் கோசங்களும் முன் வைக்கப்பட்டிருந்தன.

ஆழிப்பேரலை மீள்வாழ்வு பொதுக்கட்மைப்பை ஏற்படுத்த உதவுமாறு சர்வதேசத்தைக் கோரும் கோசங்களும், சமத்துவமான சுதந்திரமான விடுதலை வாழ்வுக்கான கோசங்களும் அங்கு எழுப்பப்பட்டன. பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மேள வாத்தியக் கலைஞர்களும், இசைக்கலைஞர்களும் விடுதலைப்பாடல்களை இசைத்தபடி ஊர்வலத்துடன் சென்றனர். உலகத் தமிழினத்திற்கெல்லாம் ஒப்பற்ற தலைவராக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களே விளங்குகிறார் எனும் குரல்கள் அந்த வீதிகளில் முழங்கிக்கொண்டிருந்தன. நிகழ்வின் இறுதியில் பிரஞ்சுக் கிளையைச் சேர்ந்த திறலோன் உரையாற்றினார். இதே போன்று சுவீடனிலும் மேநாள் எழுச்சிப்பேரணி நடைபெற்றது.

## திருவையாறு பிரதேசத்திற்கு பேருந்து சேவை வேண்டும்

**-பல வருடங்களாக மக்கள் காத்திருப்பு**

திருவையாறு பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக பேருந்துச் சேவைகள் இன்றி மக்கள் பெரும்அவலங்களைச் சந்தித்து வருகின்றனர்.

ஆனால் பல வருடங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்திற்கு பேருந்துச் சேவை கிளிநொச்சியிலிருந்து இரணைமடுப் பகுதியூடாக இருந்து வந்ததால் பொது மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்கு பேருந்துச் சேவை உதவி புரிந்துள்ளது. ஆனால் கடந்த பல வருடங்களாக இச்சேவை இடம் பெறாதமையினால் மக்கள் பெரிதும் கஷ்டத்தை எதிர் நோக்கி வருகின்றனர். எனவே இப்பிரதேசத்திற்கு கிளி.நகரிலிருந்து இரணைமடு ஊடாக பேருந்துச் சேவையினை ஆரம்பிக்குமாறும் பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதேவேளை கிளி.நகரிலிருந்து கனகாம்பிகைக்குளம் வரை பேருந்துச் சேவை இடம் பெற்று வருகின்றது. இதில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயணித்து வருகின்றனர்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு இழப்பீட்டு வசதி

(புதுக்குடியிருப்பு)

இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு, மகளிர் பொற்கணக்கு, 18பிளஸ் கணக்கு ஆகிய மூன்று கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு நஷ்டயீட்டு வசதிகள் உண்டு என இலங்கை வங்கியின் முல்லை கிளைமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் சேமிப்புக்கணக்கு வைத்திருக்கும் குழந்தைகளுக்கு பாதிப்போ அல்லது பெற்றோருக்கு உயிர் இழப்போ ஏற்பட்டா[illegible] ஏனைய இரண்டு கணக்கு வைத்திருப்போருக்கு பாதிப்பு ஏற்ப[illegible]டிருந்தால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வங்கி இழப்பீட்டினைப் பெற்றுக்கொடுக்கும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட இக் கணக்குகளுக்குரியவர்களுக்காக வங்கி ஆறுமாதத்திற்குள் இவ் இழப்பீட்டுப்பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால் உடன் வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கைவங்கியின் முல்லை கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (08)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு மாங்குளத்தில் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் வலயத்திற்குட்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு மாங்குளம் கல்விப்பணிமனையில் இடம் பெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலின்போது தொண்டர் ஆசிரியர் நேர்முகத் தேர்வுக்கான பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ளோரும், நேர்முகத்தேர்விற்கு தெரிவு செய்யப்பெறாதுள்ள மேன்முறையீடு செய்யவுள்ளோரும் தவறாது கலந்து கொள்வதுடன், தேர்வுக்கான படிவங்களையும், ஆலோசனைகளையும் பெற்றுச் செல்லும் வண்ணம் துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் குரூஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

## இலுப்பைக்கடவை பிரதேச மக்களுக்கு இலவச குடிநீர் வழங்க இணக்கம்

**-தேவன்பிட்டியில் நீர் வழங்கல் ஆரம்பம்**

(மன்னார்)

மன்னார் இலுப்பைக்கடவை பிரதேச மக்களுக்கு இலவசமாக குடிநீரை வழங்க இணக்கம் காணப்பட்டு இம் மாதம் [illegible] நடைமுறைப் படுத்தப்பட்டி[illegible]ாக தெரியவந்துள் ளது. முதற்கட்[illegible]க தேவன்பிட்டி கிராம மக்கள் பயன்பெற ஆரம்பித்துள்ளனர்.

இலுப்பைக்கடவைப் பிரதேசத்தின் விடத்தல்தீவு தொடக்கம் தேவன்பிட்டி வரையான கிராமங்களுக்கு குடிநீா வழங்குதல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் இலுப்பைக்கடவை (NEDRO) வடக்குக் கிழக்கு அபிவிருத்தி நிறுவனத்தில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் தலைமையில் இடம பெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், த.பு.கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் வ.றீகன் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபை பிரதிநிதிகள், நிர்வாக சேவை மன்னார் மாவட்ட பிரதிநிதிகள், இலுப்பைக் கடவைப் பிரதேச அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கவிப்பிரியா, மன்னார் மாவட்ட த.பு.கழக பணிப்பாளர் அ.கேசவன், வடக்குக் கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் ச.பூலோகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு குடிநீர் வழங்கலை எவ்வாறு சீரான முறையில் மேற்கொள்ளலாம் என்று கலந்தலோசிக்கப்பட்டது.

அதனடிப்படையில் தேவன்பிட்டி, விடத்தல் தீவு, முதலியார்கமம், கத்தாளம்பிட்டி ஆகிய இடங்களை பிரதேச சபையும் பொறுப்பெடுத்தது. அந்த வகையில் இதுவரை காலமும் கட்டணம் அறவிட்டு வழங்கப்பட்ட குடிநீர் மேற்படி கலந்துரையாடலின் பின் நேற்று முன்தினம் முதல் இலவசமாக வழங்கப்பட வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மன்னார் மாவட்ட த.பு.கழகத்தின் அனுசரணையுடன் அதன் பங்காளி நிறுவனமான வடக்குக் கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் (NEDRO) தேவன்பிட்டி கிராம மக்களுக்கு இலவச குடிநீர் வழங்கல் சேவையை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.15 மணி முதல் ஆரம்பித்துள்ளது. இந்நிகழ்வு கடற்புலிகளின் தேவன்பிட்டிப் பிரதேச பொறுப்பாளர் அன்பு தலைமையில் ஆரம்பமானது.





கிளிநொச்சி மாவட்ட [illegible]த்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்லும் நோயாளர்களின் [illegible]கை கடந்த சில தின[illegible]ாக அதிகரித்து காணப்படுகின்றது நேற்றையதினம் வெளிநோயாளர் பகுதி நோயா[illegible]ால் நிரம்பிய நிலை[illegible]லும், வைத்தியசாலை வாயில் முன்றலிலும் சிகிச்சைபெறுவதற்கென நோயாளர்கள் [illegible]யில் நின்றதனை ச[illegible]ம். (படம்:சோதி)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று சட்டபீட திறப்பு விழா

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நேற்று காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழகத்திற்கான சட்ட பீடத்திறப்பு விழா யாழ். பல்கலைக்கழகத்துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மங்கல விளக்கினை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் முன்னாள் தென்னிந்திய பேராயரும் பல்கலைக்கழக மூதவை உறுப்பினருமான எஸ்.ஜெபநேசன் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடாதிபதி என்.செல்வகுமாரன் இலங்கை சட்டக்கல்லூரி அதிபர் கலாநிதி எச்.கே.எப்.சில்வா, யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் திருமதி சாந்தா அபிமன்ன சிங்கம் உட்பட பலர் ஏற்றினார்கள்.

தொடர்ந்து கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன், கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தலைவர் கலாநிதி டிபிகா உடகம,கொழும்பு சட்டபீட சிரேஷ்டவிரைவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன், யாழ்.பல்கலைக்கழக மாணவ ஆலோசகர் கலாநிதி பி.புஸ்பரட்ணம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளர் எம்.சுதாகரன் ஆகியோர் உரையாற்றினார்கள். (41)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வரணியில் 25 வீடுகள் அமைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி வரணிப்பகுதியில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

மேற்படி பிரதேசத்தில் வாழ்ந்து வரும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்காகவும், அங்கவீனர்கள்,பெண்கள் ஆகியோரைத் தலைமைத்துவமாகக் கொண்டகுடும்பங்களுக்குமே இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வரணிப் பிரதேசமானது கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

# பிரதான வீதிக்கு மின் விளக்குகள்

(காரைநகர்)

லண்டனில் வாழும் காரைநகர் பகுதி மக்கள் காரைநகரின் பிரதான வீதிக்கு மின்விளக்குகளைப் பொருத்த பண உதவியினைச் செய்துள்ளார்கள். காரைநகர் அபிவிருத்திச் சபை மூலம் வழங்கப்பட்டு இந்நிதி மின்சாரசபையிடம் கையளிக்கப்பட்டு வலந்தலைச் சந்தியில் இருந்து மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

வீதிகளுக்கு மின் குமிழ்கள் இல்லாமையால் அதிகாலை நேரத்தில் பேருந்துக்காகக் காத்திருந்த மக்கள் அங்கு நிலைகொண்டுள்ள கடற்படையினரின் நெருக்கடிகளுக்குள் உள்ளாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

## வீதிச் சமிக்ஞைகள் சேதமாக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரை அண்டியுள்ள பகுதிகளில் இடப்பட்டிருந்த வீதி சமிக்ஞை குறியீட்டுப் பலகைகள் பலவும் சேதமாக்கப்பட்டும் உடைக்கப்பட்டும் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதியில் உள்ள வீதிகளில் விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. விசமிகளின் இச் செயல்கள் குறித்து மக்களாலும், வாகன ஓட்டுநர்களாலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (33)

# செம்மணி ஊடாக பயணிப்போர் மீது விசமிகளின் தாக்குதல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி மயான வீதி வழியாக இரவு வேளைகளில் பயணம் செய்வோர் மீது பற்றைகளில் மறைந்திருக்கும் விசமிகள் தாக்குதல் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பயணிகள் கொண்டு செல்லும் பயணப் பொதிகளும் இவர்களால் சூறையாடப்படுகின்றது.

அத்துடன் பகல் வேளைகளில் தனியாக இவ் வீதியூடாகச் செல்லும், பெண்கள் மீது இவர்கள் தகாத முறையில் நடந்து கொள்ளும் சம்பவங்களும். தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இச் சம்பவங்கள் குறித்து சிறிலங்காப் பொலிசார் நடவடிக்கைகள் எதனையும் எடுப்பதில்லை எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. எனவே இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரியுள்ளனர். (28)

# புனரமைக்கப்படாத நிலையில் சுண்டுக்குளி தபாலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச செயலகத்திற்கு முன்பாக இயங்கும் சுண்டுக்குளி தபாலகக் கட்டடம் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படவில்லை. இதனால் மழை நேரங்களில் இங்கு சேவையினைப் பெற வரும் மக்களும் சேவையினை வழங்குவோரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் தபாலகக் கட்டடத்துடன் அண்டியுள்ள தபால் அதிபர் தங்கும் விடுதியும் உடைந்து சிதைவடைந்து போயுள்ளது.

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எதுவித திருத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனவும், இதனைப் புனரமைத்து சிறந்த சேவையினை மக்கள் பெற ஆவன செய்ய வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

# உலக செஞ்சிலுவை தினத்தில் மருத்துவ முகாம், சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

உலக செஞ்சிலுவைச் சங்க தினமான வரும் எட்டாம் திகதி யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், இலவச மருத்துவ முகாமும் சிரமதானப்பணிகளும் இடம் பெறவுள்ளன.

இலங்கை செஞ்சிவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம், இரத்ததானம், முதலுதவிச் சேவைகள், சிரமதானப்பணிகள் மற்றும் நலிந்த மக்களுக்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளன. இத் திட்டங்கள் இப்பிரதேச, கிராம ரீதியாகவுள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# மாமனிதர் சிவராம் படுகொலை அரசின் பாசிச வெறித்தனம்

## -'பேரிகை' அமைப்பு குற்றச்சாட்டு

(அலுவலக செய்தியாளர்)

மாமனிதரும், யதார்த்த ஊடக விற்பன்னருமான டி.சிவராம் அவர்களின் படுகொலையானது அரசின் பாசிச வெறித்தன செயற்பாடு ஆகும் என கிளிநொச்சியில் இயங்கும் பேரிகை அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழ்த்தேசிய ஊடகவியலாளர் மாமனிதர் டி.சிவராம் அரச ஆதரவு பயங்கரவாதிகளினால் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டமையானது எமது பேரிகை அமைப்பையும் உலகெங்கும் வாழும் தமிழ்பேசும் மக்களையும் பேரதிர்ச்சியிலும், பெரும் கவலையிலும் ஆழ்த்தியுள்ளது.

சர்வதேச அரசியல் நியமங்களுக்கும், நியதிகளுக்கும் அமைவாக தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான சமாதான செயன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இச் சூழ்நிலையில் தமிழ்ப்புத்திஜீவிகளையும், ஊடகவியலாளர்களையும், பொதுமக்களையும் கபடத்தனமான முறையில் அரச ஆதரவுப் பயங்கரவாதம் ஈவு இரக்கமின்றி கொன்றொழித்து வருகின்றமை சமாதான செயன்முறைகள் மீது விரக்தியை [illegible]சியாளர்கள் மீது கடும் [illegible]த்தையும் எம்மிடையே ஏற்படுத்[illegible] வருகின்றது.

இது சமாதான முயற்சிகளைச் சாகடித்து விடுமென நாம் அஞ்சுகின்ற அதேவேளை அரசுக்கும், தமிழ்மக்களுக்கும் இடையிலான பகைமையுணர்வை அதிகரித்து தேசிய இனங்களுக்கிடையிலான உறவைச் சிதைக்கும் முயற்சியாகவே இதனை நாம் கருதுகின்றோம். எனவே இடபடு கொலையை எமது பேரிகைக் குழுமம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சிவராம் ஒரு யதார்த்தவாதி நிபுணத்துவம் வாய்ந்த ஒரு நடுநிலை ஊடக செயற்பாட்டாளர், இனப்பற்றாளர், தேசிய ஒருமைப்பாட்டு சிந்தனா வாதத்தில் பற்றுக் கொண்டவர். கொலை அச்சுறுத்தல்களுக்கு அப்பாற்பட்டு மானிட அரசியல் சமதர்மங்களுக்காக உழைத்தவர் ஒரு நல்ல மனிதர்.

ஊடக அறிஞர் டி.சிவராமின் இழப்பு ஊடகத்துறைக்கு மட்டுமன்றி தமிழ்த்தேசிய இனத்திற்கும் பேரிழப்பாகும். இத்தகைய படுகொலைகளை மேற்கொண்டு வரும் பாசிச வாதிகள் யாராக இருந்[illegible]ாலும் அவர்கள் தமது அரசியல் இராஜதந்திர வெற்றியாக இதனைக் கருதிவிட முடியாது

ஏனெனில் தமிழர் விடுதலை வரலாற்றில் பல புத்தி ஜீவிகளும் சுதந்திர ஊடக செயற்பாட்டாளர்களும் அரசியலாளர்களும், விடுதலை வீரர்களும் படுகொலை செய்யப்பட்ட போது தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் முனைப்புப்பெற்று வருகின்றமை கண்கூடு. எனவே இத்தகைய சனநாயகத்திற்குப் புறம்பான படுகொலைகள் நாகரீக சமுதாயம் ஒன்றிற்கு பொருத்தமற்றது என்பதுடன் தமிழ்மக்களின் விடுதலை உணர்வை வீச்சாக்கி விடுதலையை விரிவுபடுத்தும் என்பதில் ஐயமில்லை எனப் பேரிகை அமைப்புத் தெரிவித்துள்ளது. (சோ)

# யுனிசெப் நிறுவனத்தினரால் உதவிகள் வழங்கப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெப் நிறுவனத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 105 துவிச்சக்கரவண்டிகளும், இரண்டு மின் பிறப்பாக்கிகளும் கடந்த வாரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதில் முல்லைத்தீவு மாவட்ட சகாதாரச் சேவைகள் பணிமனையில் பணி புரியும் சுகாதார தொண்டர்களில் 40 பேருக்கு பெண்களுக்குரிய துவிச்சக்கரவண்டிகளும் கிளிநொச்சி வெண்புறா நிறுவனத்தின் ஊழியர்களில் 50 பேருக்கு ஆண்களுக்குரிய துவிச்சக்கரவண்டிகளும் கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்திற்கு 15 பெண்களுக்குரிய துவிச் சக்கரவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் முல்லைத்தீவுக் கல்வித் திணைக்களத்திற்கும், துணுக்காய் கல்வித் திணைக்களத்திற்கும், மின் பிறப்பாக்கிகள் ஒவ்வொன்றினையும் யுனிசெப் நிறுவனம் வழங்கியுள்ளது.

இவை அனைத்தையும் யுனிசெப் நிறுவனத்தின் வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி வெனிபுறூ அவர்கள் வழங்கினார். (கு)

# பரிஸில் கண்டனக் கூட்டம்

மாமனிதர் டி.சிவராம் அவர்களின் படுகொலையைக் கண்டித்து பரிஸில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டனக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை பரிஸ் லாச்சப்பல் முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் மாலை பிற்பகல் பிரான்ஸ் நேரப்படி6.30 மணிக்கு பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையம், தமிழ் தொலைக் காட்சி இணையம்(T.T.N), ஐரோப்பிய ஈழமுரசுப் பதிப்பு ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடத்த வுள்ளன.

# பூநகரியில் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பு

பூநகரியில் கடந்த கால இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. உலக வங்கியின் நிதிஉதவியுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் முழுமையாகப்பாதிக்கப்பட்ட 62 வீடுகளையும் பகுதியாகப் பாதிப்படைந்த 15 வீடுகளையும் மீள அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முழுமையாக பாதிக்கப்பட்டதென இனங்காணப்பட்ட கௌதாரி முனையில்11 வீடுகளும்,கெற்புலவில்11 வீடுகளும், ஞானிமடத்தில்11 வீடுகளும் வில்லடியில் பத்து வீடுகளும் பள்ளிக்குடாவில் பத்து வீடுகளும் வாடியடியில் ஒன்பது வீடுகளும்அமைக்கப்படவுள்ளன. அத்துடன் பகுதியாக பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைப்பிற்காக ஒவ்வொரு வீட்டுக்கும் தலா இரண்டு லட்சத்து ஐம்பதுஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (34)

# சமாதானமும் அபிவிருத்தியும்: விழிப்புணர்வுக் கருத்தமர்வு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் சி.ஏச்.ஏ அனுசரணையுடன் சமாதானமும் அபிவிருத்தியும், பற்றிய மூன்று நாள் விழிப்புணர்வுக் கருத்தமர்வு அண்மையில் பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்திக் கழக மண்டபத்தில் பெ.அ.பு நிறுவனத்திட்ட இணைப்பாளர் ம.சுகந்தா தலைமையில் ஆரம்பமானது.

முதல் நாள் செயலமர்வில் தலைமையுரையினைத் தொடர்ந்து சமகால நிலவரம் குறித்த கருத்தினை மல்லாவிப் பிரதேசப் பொறுப்பாளர் செல்வம் வழங்கினார். தொடர்ந்து அனிஞ்சியன்குள கிராம இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவி பற்றி ஆசிரியர் கோகுலம், சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு தொடர்பாக தமிழீழ சுகாதார சேவை இணைப்பாளர் அரவிந்தனும் மாத சிறுவர் உரிமை பற்றி ஆசிரிய ஆலோசகர் வேலும் மயிலும் கருத்துக்களை வழங்கினர்.

இந் நிகழ்வில் அனிஞ்சியன் குளம் கிராம சேவையாளர், அரசியல் துறைப் பொறுப்பாளர், விளையாட்டுக் கழகப் பொறுப்பாளர் பாண்டியன் குளம் துணுக்காய் அபிவிருத்திக் கழக இணைப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரண்டாம் நாள் கருத்தமர்வில் அனிஞ்சியன் குளக் கிராமத்தில் பெண்களை குடும்பத்தலைவிகளாகக் கொண்டவர்களுக்கு முதலுதவி, பொது சுகாதாரம்,சிறுவர் உரிமை பற்றியும் தொடர்ந்து பெண்களும், சட்டங்களும் பற்றியும் கருத்துரை வழங்கப்பட்டது.

மூன்றாம் நாளன்று கருத்தமர்வில் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு, சிறுவர் உரிமைகள், பெண்களும் சட்டங்களும் பற்றி கருத்துக்கள் வழங்கப்பட்டது. (24)

# வீதி விபத்தைத் தடுக்க சில வீதி விதிமுறைகள்

**வீதி** விபத்துப் பற்றி சாரத்தியத்தின் ஆதித்தந்தையான கென்டன் பிரபு கூறிய தத்துவம்.

வீதி விபத்து நடக்காது. அப்படி நடப்பதாயின் யாராவது ஒருவர் வீதி ஒழுங்கு முறையினைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டார் என்பதாகும்.

வீதி விபத்து தற்போது பரவலாக சகல இடங்களிலும் நடைபெறும் ஓர் மலிவுப் பொருளாகி விட்டது.

**சாரத்தியத்தின் ஆதித்தந்தை கென்டன் பிரபு கூறிய சில வீதி விதி முறைகள்**

01. பாதை அறிதல் அல்லது தெரிவு செய்தல்.

02. கண்ணாடியைப் பார்த்து வேகத்தைக் குறைத்தல்.

03. வேகத்துக்கு ஏற்ப கியர் (துணைப்பொறி) மாற்றுதல்

04. போகும் திசைக்கேற்ப சைகை காட்டுதல்.

05. தேவைப்படின் ஒலியெழுப்பும் கருவியைப் பயன்படுத்துதல்.

06. வேகத்தை குறைத்துச் செல்லுதல் என்பனவாகும்.

**இத்துடன் முடிக்கவில்லை சாரத்தியத்தின் ஆதித்தந்தை விஞ்ஞான ரீதியான சாரத்தியத்தைக் கூறுகையில்:-**

01. விபத்தில்லாத சாரத்தியம்.

02. மிருதுவான சாரத்தியம்.

03 வாகனம் நீண்ட காலம் பாவிக்கக் கூடிய சாரத்தியம்.

04. தன்னாலேயோ அல்லது பிறராலேயோ விபத்தில்லாத சாரத்தியம் ஆகும்.

**வாகன ஓட்டுநருக்கு இருக்க வேண்டிய தகமைகள் சில.**

01. பாதை அறிவு.

02. வாகனக் கட்டுப்பாடு

03. வேகமும், முன் செலுத்துதலும்

04. ஓட்டுநர் சைகை

05. பாதைச் சட்டங்கள்

06. திரும்புதல்

07. பின் நகர்த்தல்

**ஓட்டுநரின் சைகைகள் ஒன்பது**

01. வாகனத்தைப் புறப்பட ஆயத்தம் செய்கையில் சைகை.

02. பாதை மாற்றம் (பாதை விட்டு இன்னோர் பாதை செல்லும் போது) சைகை.

03. வலது பக்கம் செல்லும் போது சைகை.

04. வாகனத்தின் வேகத்தைக் குறைக்க முன் சைகை

05. பின்வரும் வாகனத்திற்கு வழி விட்டுக் கொடுக்கும் போது சைகை

06. இடது பக்கம் திரும்பும் போது சைகை.

**வாகனம் செலுத்தும் சாரதிகள் வினையமாக இருந்தால், விழிப்பாக இருந்தால், கவனமாக இருந்தால் ——— வீதி விபத்தைத் தடுக்க முடியும் ———**

07. ஓர் சந்தியில் கடமையில் இருக்கும் காவல்துறை அதிகாரியிடம் வலது பக்கம் திரும்ப அனுமதி கோரும் சைகை.

08. ஓர் சந்தியில் கடமையில் இருக்கும் காவல் துறை அதிகாரியிடம் இடது பக்கம் திரும்ப அனுமதி கேட்கும் சைகை.

09. ஓர் சந்தியில் கடமையில் இருக்கும் காவல் துறை அதிகாரியிடம் நேரே செல்ல அனுமதி கேட்கும் சைகை என்பனவாகும்.

**வாகனம் செலுத்தும் போது மிக முக்கியமான சட்டம் இடது பக்கமாக ஓடி வலது பக்கமாக முந்திச் செல்லுதலாகும். ஓர் சந்தியில் சாரதிகள் கடைப்பிடிக்க வேண்டியவை.**

01. வலது பக்கம் பார்க்க வேண்டும்.

02. இடது பக்கம் பார்க்க வேண்டும்.

03. மீண்டும் வலது பக்கம் பார்க்க வேண்டும்.

**வாகனங்களை ஓட்டுநர்கள் செலுத்தும் போது முந்திச் செல்லக் கூடாத, கூடிய இடங்கள் ஓர் சில..**

01. எதிரே உள்ள தெரு தெளிவாக எவ்விததடையும் இல்லாமல் நன்கு புலப்பட்டால் முந்திச் செல்லலாம். புலப்படாமல் இருந்தால் முந்திச் செல்லக்கூடாது.

02. ஓர் வளைவில் முந்திச் செல்லக்கூடாது.

03. மலைச் சரிவு அல்லது அதை அணுகும் பொழுது முந்திச் செல்லக்கூடாது.

04. பாதசாரிகள் கடக்கும் பகுதிகள் அல்லது அவற்றின் அருகாமையும் முந்திச் செல்லக்கூடாது.

05. தெருச் சந்திகளில் முந்திச் செல்லக் கூடாது.

06. அம்பு வளைவிலான வளைவில் முந்திச் செல்லக் கூடாது.

07. சமிக்ஞைக் கட்டுப்பாட்டினால் குறிக்கப்பட்ட இடம்.

08. இரு வெள்ளைக் கோடுகள் (பாதை அடையாளங்களை) மறைக்கும் வகையிலும் வாகனங்கள் முந்திச் செல்லக்கூடாது.

09. மக்கள் நெருக்கடியான இடங்களிலும் முந்திச் செல்லக்கூடாது.

இவை அனைத்தையும் கடைப்பிடித்து வாகனம் செலுத்தும் சாரதிகள் விபத்தைத் தடுக்க வழி அமைக்கலாம். இவைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் சாரதிகள்

**வி. தங்கேஸ்வரன் (ஓட்டுநர் பயிற்சிக் கல்லூரி தேராவில், விசுவமடு)**

வீதியில் வாகனம் செலுத்தும் தகுதி அற்றவர்களாக கணிக்கப்படுவர்கள் வீதி விதிமுறையினை கடைப்பிடிக்காமல் விபத்தை ஏற்படுத்தும் சாரதிகளால் வீதி விதிமுறையினைச் சரியாக கடைப்பிடிக்கும் சாரதிகள் கூட ஆட்கொல்லி என்ற மறைமுகப் பெயருடன் வர்ணிக்கப்படுகின்றனர்.

# எரிக்சூல்ஹெய்மின் இலங்கை விஜயத்தை தடை செய்ய தே.பிக்குமார் முன்னணி முயற்சி

(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதை தடைசெய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக ஜே.வி.பியின் முன்னணி அமைப்பான தேசிய பிக்குமார் முன்னணி அறிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் ஒருதலைப்பட்சமான அறிக்கைகள் வெளியிடுவதை எரிக்சூல்ஹெய்ம் நிறுத்தாவிட்டால் அவர் இலங்கைக்குள் நுழைவதற்கு தடைவிதிக்கும் வகையிலான செயற்பாடுகளில் தாங்கள் ஈடுபடப்போவதாக தேசிய பிக்குமார் முன்னணியின் செயலர் கலவெல் கொட சந்திரலோக தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பின் சூத்திரதாரி எரிக்சூல்ஹெய்மே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை செய்து கொள்வதை தடுக்குமாறு உயர் நீதி மன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவித்த அவர் தமது எச்சரிக்கையினை மீறி அரசாங்கம் பொதுக் கட்டமைப்பை உருவாக்க முனைந்தால் தமது பிணங்களின் மீதே அதனை அரசாங்கம் செய்து கொள்ளவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# புகையிரத வீதிக்கடவை சமிக்ஞையை மீறி பேருந்தைச் செலுத்தியவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி நூறுபயணிகளுடன் சென்ற பேருந்தை புகையிரத வீதிக்கடவை சமிக்ஞையை மீறிச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் அதன் சாரதியும், நடத்துநரும் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அளவ்வ பகுதியில் இச்சம்பவம் கடந்த 29ஆம் திகதி இடம் பெற்றுள்ளது. புகையிரதக்கடவை மூடப்பட்டிருந்த வேளையில் அதனூடாக வாகனத்தைச் செலுத்த வேண்டாமென பிரயாணிகள் கூக்குரலிட்டபோதும் அதனைச் செவிமடுக்காத சாரதி அதனூடாக வாகனத்தைச் செலுத்தியுள்ளார். ஆயினும் அவ்வேளை புகையிரதம் அப்பாதையை கடக்காததால் விபரீதம் எதுவும் ஏற்படவில்லை.

இதனை அடுத்து அளவ்வ பொலிசார் சாரதியையும், நடத்துநரையும் கைது செய்துள்ளனர். சாரதியைவரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு துல்கிரிய நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நடத்துநர் 15 வயதுச் சிறுவனாக இருந்ததால் அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 27 ஆம் திகதி குருநாகல் மாவட்டப் பொல்காவெல யாங்கல மோதரப் பகுதியில் புகையிரதக்கடவை மூடப்பட்டிருந்த போது பேருந்து செலுத்தப்பட்டதால் ஏற்பட்ட விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 38 இற்கும் மேற்பட்டோர் பலியாகி இருந்தமை தெரிந்ததே.

# அரிசிமாவில் பாண் தயாரிக்கும் தேசிய திட்டம் அமுல்படுத்தப்படும்

-சிறிலங்கா அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரிசி மாவில் பாண் தயாரிப்பதற்கான தேசியத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோதுமைக்காக வருடம் ஒன்றிற்கு 25 ஆயிரம் கோடி ரூபாவை அரசாங்கம் செலுத்துகின்றது. இதனைக் கட்டுப்படுத்தவே சிறிலங்கா அரசாங்கம் இம்முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜப்பானிய நிபுணர்களும்,வெல்வத்த சீனித்தொழிற்சாலை அதிபரும்,"இன்டர் கொண்டினல்" உணவகமும் இணைந்து இதனைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. ஐம்பது வீதம் அரிசிமாவும் ஐம்பது வீதம் கோதுமை மாவும் கலந்து பாண் தயாரிக்கப்படவுள்ளது.

இதேவேளை பாண் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் "ஈஸ்ட்" க்கு பதிலாக ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயற்கை திராவகம் ஒன்றையும்,"டியாலொஸ்" என்ற சீனி வர்க்கத்தையும் பாண் உற்பத்திக்காகப் பயன்படுத்தவுள்ளனர்.

# சேது சமுத்திரத்திட்டத்திற்கு சிறிலங்கா அரசு மீண்டும் எதிர்ப்பு

சேதுசமுத்திரத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் மீண்டும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளது.

கொழும்பிற்கு கடந்த சனிக்கிழமை விஜயம் செய்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் சியாம் சரண் கொழும்பில் சிறிலங்காவின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சேது சமுத்திரத்திட்டம் குறித்து கூட்டுக்குழு ஒன்றின் மூலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்றும் சிறிலங்காவின் அதிகாரிகள் சியாம் சரணிடம் வலியுறுத்தியுள்ளனர். ஏற்கனவே இந்தத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தத் திடீர் மாற்றம் குறித்து கலந்துரையாடுவதற்காகவே சியாம் சரண் கொழும்புக்கு விஜயம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## சமர்களில் தாய் சமர்

கிரிக்கெட் ரசிகர்களால் மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட்ட கிரிக்கெட் தொடராக பாகிஸ்தான், இந்திய சமர்கள் கடந்த மாதம் முடிவுக்கு வந்தன.





அதேதரத் காத் இத் யா திலான போட்டித்தொடர் ஒன்று கிரிக்கெட் பிரியர்களை மகிழ்விக்கக் திருக்கின்றது. என்றால் அது ஆஷஸ் டெஸ்ட் தொடர் என்று கூறலாம். தொடர் கிரிக்கெட்டில் பரமவைரிகளான இங்கிலாந்து -அவுஸ்திரேலி அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் பெரும் சமராகும்.

யூலையில் நடைபெறும் இத்தொடருக்கு முன்பாக இவ்விரு நாடுகளுட ன் பங்களாதேஷ் அணியும் பங்குகொள்ளும் முக்கோண ஒரு நாள போட்டிகள் ஜீனில் ஆரம்பமாகவிருக்கின்றது.

இது மாக வரை நடைபெற்ற ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி அண்மைக் கால கிண்ணத்தை வெற்றிகொள்ளாதது ஒருபுறமிருக்க அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் போட்டி இரு அணிகளுக்கும் மிகவும் சவால நிறைந்த போட்டியாக அமையவிருக்கிறது. காரணம் அண்மைக்கால மைக் கல்வோன் தலைமையிலான இங்கிலாந்து அணி முன்னரை விடவலுவாகவும் அதேவேளை உலக டெஸ்ட் தரப்படுத்தலில் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த நிலையில் அதாவது இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

அத்துடன் அவ்வணியின் சகலதுறை வீரரான அன்ரூபிளின் டொப் இத்தொடரை எவ்வாறேனும் கைப் பற்றும் முனைப்புடன்திகழ் கின்றார். குறிப்பாக இங்கிலாந்து அணி அவரையே நம்பியிருப்பதாகவும் தெரிகிறது. எனினும் அவரின் துடுப்பாட்டம், மெக்ராத், கி பி. ஷேன்வோர்ன் ஆகியோரிடம் எடுபடுமா என்பதும் சந்திக்கவேண்டியதே அதேவேளை அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வரிசையை பிளின்டொப் கட்டுப்படுத்துவாரா என்பதும் சந்தேகமே பிளின்டொப் கைவிட்டாலும் அண்மையில் கவுண்டி போட்டி ஒன்றில் பந்து வீச்சில் ஹட்ரிக் சாதனை படைத்த ஸ்ரீவ் ஹாமிசன் பார்த்து க் கொள்ளலாம். அத்து டன் அஸ்லி ஜைல்சின் பந்து வீச்சையும் குறைத்து மதிப்பிட முடியாது.





இங்கிலாந்து அணி இவ்வாறான நிலையிலிருக்கும் போது அவுஸ்திரேலியா புதிய இளம் வீரர்களுக்கு வாய் ப்பு அளிக்கும் நோக்கில் இத்தொடரில் புதிய வீரர்களை அறிமுகப்படுத்தப்படுகின்றனர். புதிய இளம் வீரர்கள் என்றாலும் அவுஸ்திரேலியாவில் பயிற்சி பெற்ற அனைவரும் விஷம் கொண்ட குட்டிப்பாம்புகளாகவே இருப்பர். அத்துடன் தொடர் வெற்றியை தக்கவைக்கவும் அவர்கள் கங்கணம் கட்டியிருப்பர். இந்த [illegible]ணத்தை இங்கிலாந்து முறியடித்து வரலாற்று வெற்றியைப் [illegible]ப்பதை அறிந்து கொள்ள இன்னும் 80 நாட்களே எஞ்சியுள்ளது.

**- வடிவேல்**

## உயர்ந்த மனிதருக்கு உயரிய கெளரவம்

நவீன உலகில் தற்போது விளையாடும் வீர்களை கௌரவிப்பதில் அந்தந்த நாடுகள் முக்கியத்துவம் காட்டி வருகின்றன.

இந்த வகையில் சீனாவும் தனது வீரர்களுக்கு உயரிய விருதுகளை வழங்கிக் கௌரவிக்க முன்வந்துள்ளது. சீனாவில் 2008 ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ளமையும் வீரர்களுக்கு அங்கு கிராக்கி அதி கரித்திருப்பதும் இதற்கான காரணமாகும்.



சீனாவில் தொழிலாளர்தினம் (மே தினம்) மிகவும் விசேடம் இந்த நாளில் அரசு சார்பில் மாதிரி தொழிலாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படும். இது சிறந்த பேருந்து நடத்துநர், சுரங்க, கூலித் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். இந்த நிலையில் கூடைப் பந்துப் போட்டியில் கோடி கோடியாக சம் பாதிக்கும் ஒரு வீருகக்கு வழங்கப்பட்டுள்ளமை தான் நோக்கத்தக்கது. இதற்கு சீனாவில் எதிர்ப்புக்கிளம்பாமலும் இல்லை. பாமரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விருதை பணக்கார வீரர்களுக்கு வழங்குவதா என்று விமர்சனமும் செய்தனர்.

அவர் யாருமல்ல அமெரிக்காவில் குடியுரிமை பெற்ற யாவேமிங் என்ற சீன வீரரே. அமெரிக்காவின் ஹுஸ்டன் ராக் கெட்ஸ் கிஸ் அணிக்காக நான்கு ஆண்டுகளுக்கு ரூபா 162 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இப்படிக் கோடிகளில் புரளும் ஒரு வீரருக்கு விருது வழங்குவதா என்று கேள்வி எழுப்பினர்.

மிங் ரசிகர்களோ வேறு விதமாக வாதாடுகின்றனர். அவர் கூடைப்பந்து வீரர் மட்டுமல்ல சீனாவின் கலாச்சாரத்தை உலகுக்கு சொல்லும் வீரர் என்கின்றனர். எதென்ஸ் ஒலிம்பிக்கில் சீன அணியை காலிறுதி வரை அழைத்து சென்றவரும் கூட.

அமெரிக்காவில் போட்டிகள் இல்லாத போது நாட்டுக்காக விளையாடும் பெருந்தன்மை மிக்கவர் என்றெல்லாம் புகழப்படுகின்றார். இந்நிலையில் அரசாங்கமும் இவருக்கு ஆதரவு தெரிவிக்க தொழிலாளர் விருதுக்கு மிங் தெரிவு செய்யப்பட்டார்.

24 வயதான யாவோமிங் கொஞ்சம் குதித்தாலே கூடைக்குள் பந்தை போட்டு விடலாம். அந்தளவுக்கு உயரமானவர் (7அடி, 6 அங்குலம்) இவரது திறமையை கண்ட அமெரிக்கக் கழகங்கள் பெருந்தொகைக்கு ஒப்பந்தம் செய்தன.

தற்போது நட்சத்திர வீரராக திகழும் மிங் கூறும் போதும் சாதாரண தொழிலாளருக்கு வழங்கப்படும் விருதுமுதல் முறை என்னைப் போன்றவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதை மிகப் பெரிய கௌரவமாக கருதுகின்றேன். இது சீன சமுக அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கு நல்ல உதாரணம் என்கிறார் இந்த உயர்ந்த மனிதர்.

## ஒப்பற்ற வீரரின் ஓய்வு

கால்பந்து என்றாலே ஞாபகத்துக்கு வருவது பிரேசில் அணிதான். இதற்கு அடுத்த படி தான் மற்யை அணிகள்.

இதற்கு அந்த அணி இன்று வரையும் தரவரிசையில் முதலிடம் வகிப்பதும் அவ்வணியில் இடம்பெற்றுள்ள உலகின் தலைசிறந்த வீரர்களும் தான். இதனை விட அதிக தடவைகள் கால்பந்து உலகக்கிண்ணத்தையும் இவ்அணியே கைப்பற்றியுள்ளதும் அணியின் பலத்தை தக்க வைத்துள்ளது.



இதில் ரொனால்டோ, ரிவால்டோ, கார்லொஸ், ரொனால்டினோ, ஹப்பு ரொமாரியோ போன்றோர் அணியின் வெற்றிநாயகர்கள்.

இவர்களில் விளையாடக்கூடிய தகுதியிருந்தும் ஒரு வீரர் சர்வதேச போட்டியிலிருந்து விடைபெற்று சென்றுள்ளமைதான் வேதனைக்குரியது.

அவர் யாருமல்ல ரொனால்டோ, ரொனால்டினோ போன்ற வீரர்கள் அணியில் இடம்பெறுவதற்கு முன்னர் அணியில் நட்சத்திர வீரராக திகழ்ந்தவரும் ரசிகர்களின் மனதை வென்றவருமான ரொமாரியோதான்.

இவர் சிறப்பாக ஆடிக்கொண் டிருந்த 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காயத்துக்குள்ளாகி அணியில் இடம் பிடிக்கும் முழுத்தகுதியை இழந்தார். இந்தக் காலப்பகுதியில் அணிக்குள் பல முன்னணி வீரர்கள் பிரவேசிக்க ரொமாரியோவின் மீள் வருகை அஸ்தமனமானது.

அவர் அணிக்கு அழைக்கப்படுவேன் என நம்பினார். ஆனால் தனிப்பட்ட ரீதியாக அவர் ஓரம்கட்டப்பட்டார். பல ஆண்டுகளாக கழக அணிகளில் ஆடி தனது திறமையை நிருபித்த போதும் தேசிய அணியில் அவருக்கு இடம்கிடைக்கவே இல்லை.

இதனால் மிகவும் மனவருத்தத்துக்கு உள்ளான ரொமாரியோ ஓய்வு பெறுவதை தவிர வேறு வழியில்லை என்று முடிவுக்கு வந்துள்ளார்.

இவரைக் கௌரவிக்கும் வகையில் மெக்சிக்கோவில் உள்ள குடாலஜாரா நகரில் நடந்த சினேகபூர்வ ஆட்டத்தில் ரொமாரியோ கலந்துகொண்டார். இவர் கலந்து கொண்ட அணியை எதிர்த்து மெக்சிக்கோ தேசிய அணி மோதியது. இதில் ரொமாரியோ கலந்து கொண்ட பிறேசில் அணிவெற்றி பெற்றது.பின்னர் ரொமாரியோ கண்ணீர் மல்க ரசிகர்களுக்கு கையசைத்து அரங்கிலிருந்து வெளியேறினார்.

## கொட்டுகிறது கோடி மழை

உலகில் பணம் புரளும் விளையாட்டுக்களில் டென்னிஸ்சும் ஒன்று. இதில் சாதாரண தொடர் என்றாலே பரிசுத் தொகை லட்சக் கணக்கில் இருக்கும். முக்கியமான கிராண்ட்ஸ்லாம் தொடர் என்றால் சொல்லவே வேண்டாம் பரிசுத் தொகை கோடிக்கணக்கில் கொட்டும். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் ஒரேயொரு முறை சம்பியன்பட்டம் வென்று விட்டால் போதும் கோடிஸ்வரராகிவிடலாம்.

அதிக பரிசுத் தொகை கொண்ட கிராண்ட்ஸ்லாம் தொடர் லண்டனில் நடக்கும் விம்பிளடன் தான். இத் தொடர் வரும் யூன் மாதம் 20 ஆம் திகதி தொடங்குகின்றது. இதற்கான பரிசுத் தொகைகள் தற்போது அறிவிக்கப்பட்டுவிட்டன.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்பவருக்கு கிடைப்பது பத்து கோடியே 75 இலட்சம் ரூபாய். இது கடந்த ஆண்டை விட 70 இலட்சம் ரூபாய் அதிகரிக் கப்பட்டுள்ளது. இது பெண்களுக்கு என்றால் கொஞ்சம் குறைவாகத்தான் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இம்முறை இதையும் அதிகரித்துள்ளனர். பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்பவருக்கு பத்து கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது. இது கடந்த ஆண்டை விட 80 இலட்சம் ரூபாய் அதிகம். இதை கேள் விப்பட்ட முன்னணி வீரவீராங்கனைகளுக்கு பெருத்த சந்தோசம் குறிப் பாக சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெரடர், ரஷ்யா வின் மரியா ஷெரபோவர் இருவரும் தீவர பயிற்சியில் இருக்கிறார்களாம். கடந்த முறை சம்பியன் பட்டம் வென்ற இவர்கள் இம்முறையும் வெற்றிபெற்று பரிசுத்தொகையை அள்ளிச் செல்லலாம் என காத்திருக்கிறார்களாம்.



டென்னிசில் இப்படி இருக்க உலகிலேயே அதிகளவு ரசிகர்களை கொண்ட கால்பந்து எப்படி என்றால் இது டென்னிசின் பரிசையே விஞ்சிவிட்டதாம். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக் கும் உலகக் கோப்பை கால்பந்துபோட்டி 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ளது இதற்கான பரிசுத் தொகை எவ்வளவு தெரியுமா? மொத்த பரிசுத் தொகை 460 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளதாம். இது கடந்த உலகக்கோப்பைக்கு ஒதுக்கப்பட்டதை விட 58 சத வீதம் அதிகமாம் .இந்த உயர்வுக்கு சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பீபா) கூறும காரணமானது. 2004 ஆம் ஆண்டு பீபாவுக்கு ரூபா 5600 கோடி வருமானம் கிடைத்துள்ளது. இதில் கால்பந்து போட்டி நடத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு 4400 கோடி ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. இலாபம் மட்டும் 1200 கோடி உள்ளது. இது கடந்த ஆண்டை விட 24 சதவீதம் அதிகம். இதனால் பரிசுத்தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்கிறது.

# வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

# பணிநிலை வேண்டுகை

## 01. உள்ளகக் கணக்காய்வாளர் தரம் II (ஆண்/பெண்)

**கல்வித்தகைமை:-**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில்/உயர் கல்வி நிறுவனத்தில் B.com/H.N.D.A. பட்டம் பெற்றவராகவும் ஒரு வருடத்திற்குக் குறையாத கணக்காய்வாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 05 வருடத்திற்குக் குறையாத கணக்குப் பதிவாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:-**

22-45 வருடங்கள்

**சம்பளம்:-**

7710-10910 + 2700
10X195+5X250

## 02. கணக்காளர் தரம் II (ஆண்/பெண்)

**கல்வித்தகைமை:-**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில்/ உயர்கல்வி நிறுவனத்தில் B.com/H.N.D.A. பட்டம் பெற்றவராகவும் ஒரு வருடத்திற்குக் குறையாத கணக்காளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 05 வருடத்திற்குக் குறையாத கணக்குப் பதிவாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:-**

22-45 வருடங்கள்

**சம்பளம்:-**

7710-10910 + 2700
10X195+5X250

## 03. ஆளணி மேலாளர் தரம் II (ஆண்/பெண்)

**கல்வித்தகைமை:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் B.B.A/B.com பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 05 வருடத்திற்குக் குறையாத ஆளனி மேலாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:-**

22-45

**சம்பளம்:-**

7710-10910 + 2700
10X195+5X250

## 04. தொழில்நுட்ப உத்தியோகத்தர் வகுப்பு I தரம் I (ஆண்)

**கல்வித்தகைமை:-**

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் NDT(Civil Engineering) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு 10 வருடத்திற்குக் குறையாத கட்டுமான மேலாளர் அனுபவமும் கணிய அளவையில் திருப்தியான அனுபவமும் இருத்தல் வேண்டும்.

அல்லது

இதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:-**

30-55 வருடங்கள்

**சம்பளம்:**

9160-11360 + 2700
10X220

## 05. தொழில்நுட்ப உத்தியோகத்தர் வகுப்பு I தரம் III (ஆண்)

**கல்வித்தகைமை:-**

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் NDT(Civil Engineering) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு 02 வருடத்திற்குக் குறையாத கட்டுமான மேலாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:-**

21-45 வருடங்கள்

**சம்பளம்:**

6860-8560 + 2700
10X170

## 06. வேலை மேற்பார்வையாளர் தரம் III (ஆண்)

**கல்வித்தகைமை:-**

க.பொ.த (சா/த) கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அகவை:-**

18-45 வருடங்கள்

**சம்பளம்:-**

3800-5800 + 2700
100X20

## 07. களஞ்சியக் காப்பாளர் தரம் III (ஆண்)

**கல்வித்தகைமை:-**

க.பொ.த (சா/த) கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அகவை:-**

18-45 வருடங்கள்

**சம்பளம்:-**

3800-5800 + 2700
100X20

## 08. கணக்குப்பதிவாளர் (ஆண்/பெண்)

**கல்வித்தகைமை:-**

க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்தோடு முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அகவை:-**

20-30 வருடங்கள்

**சம்பளம்:-**

4000-6200 + 2700
10X100+10X120

## 09. காவல் கடமையாளர்:

**தகைமை:**

நற்பண்பும், நற்பழக்க வழக்கமும் தேக ஆரோக்கியமும் உள்ளவராகவும், எல்லாக் காலங்களிலும் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**அகவை:-**

35-60 வருடங்கள்

**சம்பளம்:-**

6000.00 (மொத்தச்சம்பளம்)

**குறிப்பு:-**

* வேலைத்தளங்களில் தொடர்ந்து பணிபுரியும் பணியாளர்களுக்கு மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
* தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
* தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் முதல் மூன்று மாத காலம் தகுதி காண் நிலையில் கணிக்கப்படுவர். இக்காலத்தில் பயிலுநர் சம்பளம் மட்டுமே வழங்கப்படும்.

**வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம், (NECTEC)**
**கண்டி வீதி,**
**ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**
(மத்திய கல்லூரிக்கு அருகில்)

* *விண்ணப்பதாரர் பூரணப்படுத்திய விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களின் பிரதிகளுடனும் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வரவும்.*
* *நேரில் வரமுடியாதவர்கள் 09. 05. 2005 இற்கு முன் எமது பணிமனைக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.*

**நேர்முகத்தேர்வு**

01 பணிநிலை 01 முதல் 04 வரைக்குமான விண்ணப்பதாரர்களிற்கு 06.05.2005 ஆம் திகதி காலை 9 மணி முதல் எமது பணிமனையில் நேர்முகத் தேர்வு நடைபெறும்.

02 பணிநிலை 05 முதல் 07 வரைக்குமான விண்ணப்பதாரர் களிற்கு 07.05.2005 ஆம் திகதி காலை 9 மணி முதல் எமது பணிமனையில் நேர்முகத் தேர்வு நடைபெறும்.

03 .பணிநிலை 08 முதல் 09 வரைக்குமான விண்ணப்பதாரர் களிற்கு 16.05.2005 ஆம் திகதி காலை 09 மணிமுதல் எமது பணிமனையில் நேர்முகத் தேர்வு நடைபெறும்.

**பணிப்பாளர்,**
**NECTEC,**
**கிளிநொச்சி.**

(சி.11834)

# அடுத்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க வில் இளம் தலைவர்கள்

(புதுடில்லி)

இந்தியாவில் அடுத்த மக்களவைத் தேர்தலை இளம் தலைவர்கள் தலைமையில் பா.ஜ.க சந்திக்கும். வாஜ்பாய்-அத்வானி பிரதமர் பதவிக்குப் போட்டியிடமாட்டார்கள். அவர்கள் வழி நடத்துவார்கள் என்று பா.ஜ.க வட்டாரங்கள் தெரிவிக்கிறன.

பா.ஜ.க வில் வாஜ்பாய்,அத்வானி போன்ற வயதான தலைவர்கள் ராஜினாமாச் செய்துவிட்டு இளம் தலைவர்களுக்கு வழிவிடவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுதர்சன் யோசனை கூறினார். விசுவ இந்து பரிஷத் தலைவர் ஆச்சார்ய கிரிரஜ் கிஷோரும் இதே கருத்தைத் தெரிவித்தார். இந்தக் கருத்துக்குப் பா.ஜ.க.வில் முதலில் எதிர்ப்புக் கிளம்பியது. பின் பா.ஜ.க தலைவர் அத்வானியே இந்தக் கருத்தை ஏற்ப தாகச் சொன்னார் எனத் தெரிகிறது.



உக்ரைன் நாட்டைச் சேர்ந்த ஏவிக்கான் ஏவியோஷன் நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு விமானம் சவுதி அரேபியாவில் இருந்து புறப்பட்டு இந்தியா போபாவிலுள்ள இராணுவ விமானத்தளத்தில் அனுமதியின்றி சட்டவிரோதமாக இறங்கியது. அந்த விமானத்தை மடக்கிய இராணுவத்தினர் அதிலுள்ள விமானிகள் உட்பட நாலு பேரைக் கைது செய்தனர்.

# அத்வானியே பா.ஜ.க. தலைவர் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கூறுரை

அத்வானியே எங்களின் தலைவர். ஆடுத்த பொதுத் தேர்தலின் போதும் அவரே கட்சியை வழிநடத்திச் செல்வார். அவரது சீரிய தலைமையின் கீழ் நாங்கள் அடுத்த தேர்தலை சந்திப்போமென முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய் மற்றும் அத்வானி ஆகியோர் கட்சிப் பதவியில் இருந்து விலக வேண்டும். இளைஞர்களுக்கு வழிவிட வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுதர்சன் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து பா.ஜ.க வில் கடந்த ஒரு மாத காலமாகவே சலசலப்பு நிலவி வருகிறது. சுதர்சன் போட்டிக்கு சில நாட்களுக்குப் பின்னர் வாஜ்பாய் பதில் அளித்தார். அப்போது சுதர்சனின் யோசனையை ஏற்றுக்கொள்வதாக கூறிய அவர், தான் எந்தப் பதவியும் வகிக்கவில்லை. அதனால் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறினார். பா.ஜ.க தலைவர் பதவியில் இருந்து விலகுவது பற்றி அத்வானி தான் முடிவு எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். சுதர்சன் எழுப்பிய விவகாரம் பாரதிய ஜனதா கட்சியில் சர்ச்சையை உண்டாக்கியது.

இந்நிலையில் உ.பி மாநிலத்தின் ஜன பஞ்சாயத்து நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பா.ஜ.க துணைத் தலைவர் முக்தார் அப்பாஸ் நக்வி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அடுத்த பொதுத் தேர்தலில் பாஜக வுக்கு புதிய தலைவர் தலைமை தாங்குவார். இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த இளைய தலைவர் ஒருவர் கட்சியை வழிநடத்திச் செல்வார் எனக் குறிப்பிட்டார். ஆனால் அதற்கு மாறான கருத்தைப் பிரதமர் வாஜ்பாய் கூறினார். உத்தரப் பிரதேச தலைநகர் லக்னோவில் பா.ஜ.க மகளிர் அணியின் தேசிய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இரு நாட்கள் நடக்கும் இந்தக் கூட்டத்தை ஆரம்பித்து பின்னர் வாஜ்பாய் நிருபர்களிடம் கூறியதாவது; அடுத்த பொதுத்தேர்தலில் அத்வானியே கட்சியை வழிநடத்திச் செல்வார். அவரின் தலைமையில் பா.ஜ.க தேர்தல் களத்தைச் சுந்திக்கும் அத்வானியே எங்கள் தலைவர். கட்சியின் தலைவர் விடயத்தில் எந்த விதமான குழப்பங்களுக்கும் இடமில்லை. பா.ஜ.க வின் தலைவர் மாற்றம் குறித்த பேச்சுக்கே இடமில்லை என்றார்.

# மத்திய மந்திரி வீட்டில் புகுந்த திருடர்கள்

மத்திய உள்துறை மந்திரி சிவராஜ்பட்டேல் மராட்டிய மாநிலம் லத்தூரைச் சேர்ந்தவர். அங்குள்ள சத்பவனா நகரில் அவரது வீடு உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருடர்கள் சிவராஜ் பட்டேல் வீட்டின் ஜன்னல் கம்பியை வெட்டி உள்ளே புகுந்தனர். ஆனால் அவர்கள் அங்கிருந்து எதையாவது திருடிச்சென்றார்களா? இல்லையா? என்பது பற்றித் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

சிவராஜ் பட்டேலின் வீட்டுக்குள் திருடர்கள் புகுந்தது பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அவரது வீட்டுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது.





நேற்றுமுன்தினம் உலகத் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்ட நிலையில் இந்திய ஊடகம் ஒன்றுவெளியிட்ட தொழிலாளரின் துயர்சுமந்த வேலைப்பழுவை சித்திரிக்கும் புகைப்படங்கள், அளவுக்கதிகமான மூடைகளை ஏற்றிச் செல்லும் 'றிக்ஷா' தொழிலாளியை முதலாவது படத்திலும், கல்லுடைத்துச்சீவியம் நடத்தும் குழந்தையின் தாய் ஒருவரை இரண்டாவது படத்திலும் காணலாம்.


## Calling for Applications Diploma course in English Language

At

English language College, Kilinochchi

*.A6 month residential course:
With a free day on Sundays, and monthly leave on the last week- end of the month.

*.Basic qualifications required:
Passes in three subjects at the GCE (A\L) in one sitting, with a credit pass (minimum) in English Language at the G.C.E (O/L).

*.A monthly allowance of Rs,6000/=
With free board and lodging during the period of the course.

*.N.B. After success fully completing the course, the appli cant should sign a contract to teach in school in the N-E Province for at least 3 years, during which period he/she will be paid the salary equivalent to the salary of a graduate.

Closing Date of Applications 10 th may,2005
(persons from all pats of the Island can apply.)

*.Please, send in your application, with your bio-data, including educational qualifications, and two testimonials to:

The Administrative Officer,
English Language College,
Jeyanthynagar, Kilinochchi.

(6090)

Director, ELC.


# தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

காஷ்மீர் மாநிலம் அனந்த்நாக் மாவட்டம் பகல்காம் பகுதியிலுள்ள சலால் என்ற இடத்தில் தீவிரவாதிகளுக்கும், படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் குப்வாரா மாவட்டம் சங்கிபால் என்ற இடத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டார்.பூபஞ்ச் மாவட்டம் ஹர்ணிப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது தீவிரவாதிகள் கை எறிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினார்கள்.


## 45 ஆம் நாள் நினைவு



பிறப்பு :-16.02.1978
இறப்பு:-20.03.2005

சித்திரமூர்த்தி கலைவாணி

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
கணவன்
863 திருநகர்,
கிளிநொச்சி

(5922)





கலியுக வரதனாம் திருநகர் (4 ஆம் யூனிற்)
சுப்பிரமணியர் தேவஸ்தானத்தில்

## நவக்கிரக சாந்தி விழா

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் சித்திரை மாதம்25 ஆம் நாள் (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்குறித்த தேவஸ்தானத்தில் விநாயக வழிபாடும்,ருத்திராபிஷேகமும், மூலமூர்த்திக்கு விசேட தீபாராதனையும், பூசைகளும், நவக்கிரக தேவர்களுக்கும் விஷேட ஓமம் அபிஷேகம்,பூசை செய்வதற்கு முருகன் திருவருள் கூடியிருப்பதால் சகல மக்களும், மாங்கல்ய தோசமுடையவர்களும், நோய்த்துன்பத்தால் பாதிப்புடையவர்களும், புத்திரதோஷமுடையவர்களும்,நாகதோசம், செவ்வாய்தோசம், குருதோசம், சனிதோசம் இருப்பவர்களும் பார்த்தீப வருட தோசமான கார்த்திகை 2,3,4, ஆம் கால்,ரோகிணி,மிருகசீரிடம்,சித்திரை,சுவாதி விசாகம் 1,2,3 ஆம் கால்,அவிட்டம் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தவறாது சாந்தியில் கலந்துகொள்ளவும். எல்லா நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் கலந்துகொள்ளலாம்.

### குருமார் விபரம்

சிவாகம துரந்தரர் சிவஸ்ரீ சிவகந்ததாசக்குருக்கள்(திருநகர் முருகன்ஆலயம்),ஜோதிட மணி சிவஸ்ரீ கணேசபூரணக் குருக்கள் (மல்லாவி முருகன்ஆலயம்),சிவஸ்ரீ. ஞானப்பிரகாசக் குருக்கள் (மல்லாவி சிவன் ஆலயம்), சிவஸ்ரீ. வீரசிங்கக்குருக்கள் (சாளம்பன் விநாயகர் ஆலயம்), ஆலய குரு பிரம்மஸ்ரீ.க.கஜேந்திரசர்மா (திருநகர் முருகன் ஆலயம்)

உதவியாளர்:- சண்முகதாஸ்,சிவநாதன்.


குறிப்பு:- 4 நாட்களுக்கு முன் ஆலய குருவிடம் தொடர்பு கொள்க. அடியார்கள் பூமாலை, பால், இளநீர், நெய், சமித்துவகை,அர்ச்சனைப் பொருட்கள் கொண்டு வரவும். இதனால் மக்களுக்கு விவசாயம், பசுவிருத்தி,தனதானியம், செல்வம் செழித்துவரும்.

மங்கள வாத்தியம் நிமலன் குழுவினர். ஒளி,ஒலி அமைப்பு யோ.குகபாலன்

மக்கள் நலன் கருதும்
திருநகர் முருகன் ஆலய பரிபாலன சபையினர்.

(சி.11831)


# ஓட்டக்குவிப்பில் மேற்கிந்தியதீவு முன்னேற்றம் இறுதி டெஸ்ட் வெற்றி தோல்வியை நோக்கி



தென்னாபிரிக்காவுக்கு எதிராக அண்டிகுவாவில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட்டின் மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 299 ஓட்டங்களைப் பெற்று பலோஒன் நிலையை தவிர்க்கும் நிலைக்கு வந்துள்ளது.


முன்னதாக தென்னாபிரிக்க அணி 525 ஓட்டங்களுடன் தனது முதல் இன்னிங்சை ஆரம்பித்து, மேலும் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 588 ஓட்டங்களாகத் தனது எண்ணிக்கையை அதிகரித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஜக்கலிஸ், பிரின்ஸ் முறையே 147,131 என்ற ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.





மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் வேவல் ஹின்ப்ஸ் ஐந்து ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, ராம் நரேஷ் சர்வான்103 ஓட்டங்களுடனும், கிறிஸ் கெய்ல்ஸ் 184 ஓட்டங்களுடனும் களத்திலிருந்த இவர்களிருவரும் இரண்டாவது இணைப்பாட்டமாகப் பெற்ற 299 ஓட்டங்கள் 1939 ஆம் ஆண்டு உத்தியோகப் பற்றற்ற ஆட்டமொன்றில் இங்கிலாந்தின் போல் கிப், பில் எட்ரிச் இணைபெற்ற 280 ஓட்டத்தைக் கடந்து விட்டது.

# இன்னும் இரண்டு வருடத்தில் வோர்ன் ஓய்வு பெறுகிறார்



அவுஸ்திரேலிய சுழல்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் கிரிக் கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் புகழ்பெற்ற சுழல்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன். இவர் சர்வதேச போட்டிகளில் இருந்து இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஓய்வு பெறுவார் என்று அவருடைய சகோதரரும், முகாமையாளருமான ஜேசன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் சிட்னியில் இருந்து வெளிவரும் சன்ஹெரால்ட் எனும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இந்தத் தகவலைக் கூறியுள்ளார். 2006-07 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஆஷஸ் தொடர் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்று விளையாடிய பிறகு ஷேன்வோர்ன் ஓய்வு பெறத் திட்டமிட்டுள்ளதாகவும், அதைத் தொடர்ந்து தனது குடும்பத்தினருடன் அதிக நேரத்தைச் செலவிட அவர் முடிவு செய்திருப்பதாகவும் முகாமையாளர் ஜேசன் அப்பேட்டியில் கூறியிருக்கிறார்.

வோர்ன் இன்னும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதை மிகவும் விரும்புகிறார். அவர் தனது முதல் டெஸ்ட்டை இந்தியாவுக்கு எதிராக 1992 இல் விளையாடினார். அவருடைய கடைசி டெஸ்ட் போட்டி சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் டெஸ்ட் போட்டியாக இருக்கும் என்றும் ஜேசன் தெரிவித்தார்.




# பட்டம் வென்றார் ஹெனின்

போலந்தின் வார்சா நகரில் ஜே.எஸ். கோப்பைக்கான டென்னிஸ் தொடர் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில் உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 3-6,6-2,7-5 என்ற செட்களில் ரஷ்யாவின் கஸ்னட்சோவாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். ஹெனின் வெல்லும் 21ஆவது சம்பியன் பட்டம் இது.

# ரொனால்டோ அபாரம்; மிட்ரிட்டுக்கு வெற்றி

ஸ்பானிஷ் லீக் கால்பந்து போட்டிகள் மாட்ரிடில் நடந்து வருகின்றன. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ரியல் மாட்ரிட், ரியல் சோஷியட்ட அணிகள் மோதின. இதில் முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல் அடிக்க இயலவில்லை. இரண்டாவது பாதியில் ரொனால்டோ தனது முத்திரையை பதித்தார். இவர் ஆட்டத்தின் கடைசி ஏழு நிமிடத்தில் இரண்டு கோல்கள் அடித்து ரியல் மாட்ரிடை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெறவைத்தார்.



பிரான்சில் நடந்த தடகளப் போட்டிகளில்,பெண்களுக்கான 100 மீற்றர், ஓட்டப்பிரிவில் அமெரிக்காவின் மரியன் ஜோன்ஸ் முதலிடம் பெற்றார். இவர் இந்தத் தூரத்தை 11.28 வினாடிகளில் கடந்தார். ஊக்க மருந்து உட்பட பல சர்ச்சைகளில் சிக்கிய இவர் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு தற்போதுதான் சர்வதேசப் போட்டி ஒன்றில் களமிறங்குகிறார்.

# டேவிஸ் கோப்பை டென்னிஸ் இந்தியாவுக்கு முழுமையான வெற்றி



டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஐந்து ஆட்டங்களிலும் உஸ்பெகிஸ்தானை வீழ்த்தி இந்திய அணி முழுமையான வெற்றியினைப்பெற்றுள்ளது.

இந்தியா-உஸ்பெகிஸ்தான் டென்னிஸ் அணிகளுக்கிடையே டேவிஸ் கோப்பை ஆசியா ஓசியானியா மண்டலப் போட்டிகள் ஜெய்ப்பூரில் நடைபெற்று வந்தது. ஏற்கனவே இரு ஒற்றையர் பிரிவுப் போட்டிகளிலும், ஒரு இரட்டையர் பிரிவு போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றிருந்தது.

இந்த வெற்றிகளை இந்திய வீரர்கள் லியாண்டர்பயஸ், மகேஷ்பூபதி, பிரகாஷ் அமிர்தராஜ் ஆகியோர் ஈட்டிக் கொடுத்தனர். இவ்வெற்றிகளின் மூலம் இந்திய அணி 3-0 புள்ளி கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ரிவர்ஸ் சிங்கிள் என்கிற மாற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டங்கள் நடைபெற்றன. ஒரு ஆட்டத்தில் இந்திய வீரர் பிரகாஷ் அமிர்தராஜும், உஸ்பெகிஸ்தான் வீரர் பரூக் தஸ்தோவும் மோதினார்கள். முதல் செட்டை பிரகாஷ் அமிர்தராஜ் இழந்த போதிலும், அதன் பிறகு சுதாகரித்துக்கொண்டு ஆடி அடுத்த இரு டுக்களையும் அவர் கைப்பற்றி போட்டியில் வெற்றியும் பெற்றார். அவர் 6-7 (4-7), 6-4, 6 சட் கணக்கில் தஸ்தோவை வீழ்த்தினார்.

# சுனாமி மும்முனை கிரிக்கெட் போட்டி சிறிலங்கா அணிக்கு 97 ஓட்ட வெற்றி


மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் சுனாமி நலநிதிக் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் டுபாயில் ஆரம்மானது.

முதலாவது போட்டியில் சிறிலங்கா- இந்திய அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 49.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்களை பெற்றது.

253 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பொடுத்தாடிய இந்தியா 44 ஓவர் நிறைவில் 155 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்திய அணி தேசிய அணியில் தற்போது இடம்பெற்றுள்ள எந்தவீரரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# அதிபார குத்துச்சண்டை சம்பியனாக அமெரிக்காவின் ஜேம்ஸ் டோனி தெரிவு



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உலக அதிபார குத்துச் சண்டை சாம்பியன் பட்டத்தை அமெரிக்காவின் ஜேம்ஸ் டோனி கைப்பற்றினார். இவர் ஜான்ருயிசை வென்றதாக நடுவர்கள் ஒருமனதாக அறிவித்தனர்.

நியூயோர்க்கில் உலக குத்துச்சண்டை சங்கத்தின் சார்பில் அதிபார பட்டத்துக்கான போட்டி நடந்தது. 12 சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் ஜேம்ஸ் டோனி, பியர்ட்டோ ரிக்கோவின் ஜான்ருயிசை எதிர்த்து களமிறங்கினார். 36 வயதான டோனி ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்தினார். ஆனாலும் 33 வயதான ருயிசுக்கு ரசிகர்கள் அமோக ஆதரவு அளித்தனர். இவர்களது கரகோஷம் கைகொடுக்க அவ்வப்போது சரியான பதிலடி கொடுத்தார். ஏழாவது சுற்றில் டோனியின் கைமேலோங்கியது. இவர் அடுத்தடுத்து விட்ட குத்தில் ருயிஸ் 'நாக்-டவுன்' முறையில் கீழே விழுந்ததாக கூற சர்ச்சை வெடித்தது. பின்னர் எழுந்த ருயிஸ் தாக்குதலை தொடர்ந்தார். எட்டாவது சுற்றில், இருவரும் மிகக் கடுமையாக மோதினர். ருயிஸ் மூக்கில் இருந்து ரத்தம் கொட்டியது மறுபக்கம் டோனியின் வாயில் இருந்து ரத்தம் வழிந்தது. முகத்தில் எங்கும் ரத்தமயமாக காட்சி அளிக்க 10 ஆவது சுற்றில் இரு வீரர்களும் மிகுந்த களைப்புடன் காணப்பட்டனர். 11,12 ஆவது சுற்றில் தனது அசுர தாக்குதலை வெளிப்படுத்திய டோனி வெற்றியை உறுதி செய்தார்.

இருவரும் கடைசிவரை விட்டுக்கொடுக்காமல் போராடியதால், நடுவர்கள் 116-111,116-111, 115-112 என்ற புள்ளிகள் கணக்கில் டோனி வென்றதாக ஒருமனதாக அறிவித்தனர். இதையடுத்து ரூயிசின் சம்பியன் கனவு தகர்ந்துபோனது 1991இல் முதல் முறையாக உலக சம்பியன் பட்டம் வென்ற டோனி, 2003இல் கிருய்சர் வெயிட்சாம்பியன் ஆனார். இவாண்டர் ஹோலிபில்ட் போன்ற ஜாம்பவான்களை சமாளித்து திறமையை நிரூபித்தார். பின்னர் காயம் ஏற்பட, நீண்டகாலமாக போட்டிகளில் பங்கேற்கவில்லை.








கண்டாவளைப் பிரதே செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா 26. 04. 2005 ஆம் திகதி முரசுமோட்டை விளையூமி விளையாட்டுத்திடலில் இடம்பெற்றது. விளையாட்டுக் கழகங்க கிடையிலான விளையாட்டுக்களில் அதிக புள்ளிகளைப் பெற்றுமுதலிடம் பெற்ற இளைஞர்வட்ட விளையாட்டுக் கழகத்திற்கு கேடயத்தினை—கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகன் வழங்கு வயும், கண்டாவளை உதவிஅரசாங்க அதிபர் சி. சத்தியசீலன் மற்றும் பிரதம விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் , விளையாட்டு போட்டியில் கலந்துகொண்டுள்ள வீரர்களையும் படங்களில்காணலாம்.

## சிந்தனைக்கு



இயற்கை எனது நண்பன்;
வாழ்க்கை எனது தத்துவாசிரியன்;
வரலாறு எனது வழிகாட்டி.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# பொதுக்கட்டமைப்பும் உதவுவோரும்

சுனாமி அனர்த்த நிதியுதவி முகாமைத்துவம் தொடர்பான பொதுக் கட்டமைப்புக் குறித்து உறுதியான முடிவொன்றை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதில் உதவி வழங்கும் நாடுகள் முனைப்பாக இருப்பதாகக் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கென்றே நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்மும், ஜப்பானின் விசேடதூதுவர் யகூசிஅகாசியும் இம்மாதமுதல் வாரத்தின் இறுதியில் இலங்கை வரவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுக்கட்டமைப்புக் குறித்து சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோர் கனிசமான அக்கறை கொண்டுள்ளனர் இதனைச் சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் பட்சத்திலேயே வாக்குறுதி அளிக்கப்பட்ட நிதியுதவிகள் வழங்கப்படும் எனப் பல நாடுகள் சிறிலங்கா அரசிற்கு அறிவுறுத்தியுள்ளமையே வெளிப்படுத்தியுள்ளன.

அத்தோடு கண்டியில் இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள உதவி வழங்குவோர் மாநாட்டிற்கு முன்பாக இதுகுறித்து முடிவெடுக்கப்படின் அதிகரித்த நிதியுதவி பெற வாய்ப்புண்டு எனவும் அவை சிறிலங்கா அரசிற்கு பெரும் வாய்ப்பாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டதுண்டு. இந்நிலையில் மாநாட்டு நிதியுதவிகளைப் பொதுக்கட்டமைப்பு முடிவு தீர்மானிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டதுண்டு.

இதனை வலியுறுத்துமாப் போன்றே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் அண்மையில் பொதுக்கட்டமைப்புக் குறித்து வலியுறுத்திப் பேசியுள்ளார். அதாவது ஷயார் எதிர்த்தாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் எனச் சவால் விடுத்தும் உள்ளார். அதாவது தமது கூட்டணியில் உள்ள ஒன்பது கட்சிகளில் ஒன்று மட்டுமே பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதாகவும் அதனையும் வழிக்குக் கொண்டு வரமுடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு பேசியிருப்பினும் அவரின் நிதி அமைச்சின் செயலாளரோ கண்டியில் நடைபெறவுள்ளஉதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கும் பொதுக்கட்டமைப்பு விவகாரத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்துள்ளமை முக்கியத்துவம் மிக்கதாகும்.

இந்நிலையில் எழும் முக்கிய கேள்வியானது பொதுக்கட்டமைப்புக் குறித்த தீர்மானம் ஒன்று உதவி வழங்குவோர் மாநாட்டிற்கு முன்னதாக எடுக்கப்படுமா என்பதே ஆகும். ஏனெனில் சிறிலங்கா அரசின் சூழ்நிலை அதற்கு ஏற்றதாக இல்லை. அவ்வாறாயின் சனாதிபதி சந்திரிகா அளித்த உறுதி மொழிகள் எத்தனை தூரம் சாத்தியப்பாடானது.

சிறிலங்கா அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விடயத்தில் இறுதிவரை முன்னேறுமா என்பது சந்தேகத்திற்குரியதே. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஆளும் கூட்டணிக்குள் பலமான எதிர்ப்பு இருப்பதும் வெளிப்படையானதொன்றே. இந்நிலையில் முக்கிய பங்காளியான ஜே.வி.பியை எதிர்த்துப் பொதுக்கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்குமா என்பது சந்தேகமே ஏனெனில் அத்தகையதொரு நகர்வை மேற்கொண்டு அரசியல் அஞ்ஞானவாசம் போக சனாதிபதி சந்திரிகா தயாராக இருப்பார் என்பது கேள்விக்குரியதே.

இந்நிலையில் உதவி வழங்கும் நாடுகளின் விருப்பங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. ஆனால் அத்தகையதொரு சூழ்நிலை இல்லை என்பதை நிருபணம் செய்வதற்காகவே சனாதிபதி சந்திரிகா இன்று இது குறித்து உரக்கப் பேசுகின்றார்.

ஆகையினால் பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் பற்றி அரசாங்கம் பேசுவதானது நடைமுறையில் சாத்தியமாகப் போவதில்லை. அத்தோடு இம்மாத மத்தியில் நடைபெறவுள்ள சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் பின் இன்று பேசப்படுவது கூடப் பேசப்படுமா என்பது சந்தேகமே.

ஏனெனில் இவ்உதவிவழங்குவோர் மாநாட்டில் நிதி உதவி குறித்து எடுக்கப்படும் தீர்மானம் சாதகமானாலும் சரி, பாதகமானாலும் சரிஆட்சியாளர்களுக்கு அதன்பின் பொதுக்கட்டமைப்புத் தேவையற்றதொன்று, சர்வதேச சமூகத்தின் வற்புறுத்தல் கூட வலுவற்றதாகிவிடும். ஆகையினால் பொதுக்கட்டமைப்பு என்ற பேச்சை உதவி வழங்கும் மாநாடு வரையில் இழுத்தடித்தால் மட்டுமே சிறிலங்கா அரசிற்குப் போதுமானதாகும். அதற்கு அப்பால் அது பேசப்படவேண்டிய விடயம் ஒன்றாக ஆளும் கட்சிக்கு இருக்கமாட்டாது.

# பொதுக்கட்டமைப்புக்கு இணங்க மறுப்பது எமக்கே பாரிய பின்விளைவை ஏற்படுத்தும்

## சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் விடயத்தில் விடுதலைப்புலிகள் மிகவும் நெகிழ்வுப் போக்கினைக் கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இவ்வாறான நெகிழ்வுப் போக்கினைக்கடைப்பிடிக்கும் நேரம் அரசாங்கம் அதற்கு இணங்க மறுப்பது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பிலியந்தையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சனாதிபதி இந்தக் கருத்தினை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பில் அங்கம் வகிக்கும் எட்டுக் கூட்டணி கட்சிகள் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி யினர் மட்டுமே இந்தத் திட்டத்தை எதிர்த்து வருவ தாகவும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (32)

# அரசாங்கத்தை ஆட்சி கவிழ்க்கும் காலம் தற்போது வந்து விட்டது- ரணில்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை ஆட்சி கவிழ்க்க வேண்டிய காலம் தற்போது வந்துவிட்டதாக எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் ஒருவருட காலம் முடிவடைந்தும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை. சுனாமி ஏற்பட்டு நாலு மாதம் முடிவடைந்தும் வீடுகள் எதுவும் கட்டிக் கொடுக்கவில்லை. பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்று மக்களின் சொத்துக்களைச் சூறையாடிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் நாட்டை அழிவுப்பாதையிலிருந்து மீட்பதற்கு இந்த அரசாங்கத்தை பதவியிறக்கச் செய்வதற்கு அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார் (32)

# சிறிலங்கா அரசியல் விவகார சபைக்கு உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா அரசியல் விவகார சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு ஜாதிக ஹெல உறுமய வின் பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக்க தேரரின் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஓய்வுபெற்ற உயர் நீதிமன் நீதிபதிகளான சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மார்க் பெர்னாண்டோ,சவுதிஅரேபியாவிற்கான சிறிலங்காவின் முன்னாள் தூதுவர் ஜாவீட் யூசுப் முன்னாள் வடமத்திய மாகாண ஆளுநர் ஜிம்சி சமரவீர முன்னாள் பிரதம நீதியரசர் சரத் டீ சில்வா தமிழ் பத்திகை ஒன்றின் பிரதம ஆசிரியர் ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை முடிவுகள் எடுக்கப் படவில்லை என அறிவிக்கப் பட்டுள்ளது. பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஐந்து உறுப்பினர்களை சனாதிபதி அரசியல் விவகார குழுவிற்கு நியமனம் செய்ய வேண்டும என்றும் ஆறாவது உறுப்பினர் சிறுபான்மையின மக்கள் சார்பான பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் எனவும் அரசியல மைப்பின் 17ஆவது சரத்தில் தெரிவிக் கப்ட்டுள்ளது. பிரதமர் எதிர்கட்சித் தலைவர் சபாநாயகர் மற்றும் சனாதி பதியின் விசேட பிரதிநிதி ஆகி யோரும் அரசியல்அமைப்பு ஆணைக் குழுவின் பிரதிநிதிகளாக செயல் படுவர்கள் என்றும் குறிப்பிப்பட்டுள்ளது (32)

# மின்சாரம்–பெற்றோலிய தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட முஸ்தீபு

(கொழும்பு)

மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களின் தொழிற்சங்கங்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கான முனைப்புகளை மேற்கொண்டு வருகின்றன.

மின்சார சபையை மீளமைத்தல் மற்றும் திறைசேரியிடம் இருக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கை விற்பனை செய்வது போன்ற நடவடிக்கைகள் குறித்து மீண்டும் அமைச்சரவை நாளை ஆராயவுள்ளதை அடுத்தே இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தொழிற்சங்கங்கள் தயாராகின்றன.

ஏற்கனவே மின்சார சபை மீளமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்குவிற்பனை என்பன தொடர்பில் அமைச்சரவை ஆராயவிருந்த நிலையில் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பை அடுத்து குறித்த அமைச்சரவைக் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

# சிறிலங்காவில் கடந்த இரண்டு வருடங்களில் 700 இற்கும் மேற்பட்ட பேருந்து விபத்துக்கள்

(கொழும்பு)

சிறிலங்காவில் கடந்த இரண்டு, வருடங் களில் மட்டும் சுமார் எழுநூறுக்கு மேற்பட்ட பேருந்து விபத்துக்கள் ஏற்பட் டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் திணைக்கள பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதில் 179 விபத்துக்களுடன் சிறிலங்கா போக்குவரத்துத்துறை சம்பந்தப்பட்டுள்ளது. ஏனைய விபத்துக்களுடன் தனியார் பேருந்துகள் சம்பந்தப்பட்டுள்ளன.

இந்த விபத்துக்களினால் பெரும் உயிரிழப்புக்களும். கோடிக்கணக்கான சொத்திழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. சாரதிகளின் கவனயீனக்குறைவினாலேயே பெருமளவான பேருந்து விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுக் கட்டமைப்பினால் அரசுக்கும் நன்மையே— டி.யு.குணசேகர

பொதுக்கட்டமைப்பினால் விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல அரசிற்கும் நன்மையே ஏற்படும் என அமைச்சர் டியு.குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்கள்தான் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பெருமளவு உயிரிழப்புக்களை முஸ்லிம் மக்கள் சந்தித்துள்ளனர். அடுத்ததாக தமிழர்கள் அதிகளவில் உயிரிழந்துள்ளனர். அவர்கள் சிறுபான்மையினர் என்பதால் அவர்கள் குறித்து போதிய அக்கறை செலுத்தாது போனால் சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் அரசியலமைப்பு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சருமான டி.யு.குணசேகர மேலும் தெரிவித்துள்ளார். (32)

# உலகின்முன் கருத்துச் சொல்லும் அருகதையை

# சிவராமின் கொலையுடன் அரசு இழந்துவிட்டது

**- சிவராமின் இரங்கல் உரையில் வே. பாலகுமாரன்**



(அலுவலக செய்தியாளர்)

மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் அவர்களின் சாவோடு சிறிலங்கா அரசு இனிமேல் உலகத்தின் முன்னால் தலை நிமிர்ந்து கருத்தைச் சொல்வதற்கான அருகதையை ஒட்டு மொத்தமாக இழந்துவிட்டது என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் அவர்களின் இரங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

டெய்லி நியூஸ் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அஜித்தமிழ்த்தேசிய போராட்டத்தினுடைய வடிவம், அதனுடைய அடிப்படை ஆதாரம் அதனுடைய உச்சத் தியாகம் எனத் தலைப்பிட்டு சிவராமின் படுகொலையை எழுதியுள்ளார். இங்கு நான் சொல்லும் கருத்துக்கள் எல்லாம் சிங்களவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்களாகும். இதன் மூலம் எமது விடுதலைப்போராட்டத்தின் வீச்சு எவ்வாறு உள்ளதென்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

தர்க்கம், நீதி, நியாயம், மனிதநேயம், அறிவு, துணிவு என்பன சிவராமின் சாவோடு செத்துவிட்டன. அவரின் அற்புதமான அறிவு, வரலாறு, சமூகவியல், சர்வதேச பரிணாமம் தொடர்பான தரவுகள் எல்லாவற்றையும் விட, இராணுவரீதியான போரியல் ஆய்வு, மனிதநேயம் அனைத்தும் கொண்ட சர்வதேசத் தரம் வாய்ந்த ஊடகப்போராளியை உலகம் இழந்துவிட்டது.

அவரின் செயற்பாடு மறுக்கப்பட முடியாத நிலைக்குத் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்ட நியாயத்தை உலகின் முன் எடுத்தியம்பி நிற்கிறது.

எந்தவொரு முட்டாளாவது தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக, பலவீனப் படுத்துவதற்காக இந்தச் சாவை நிகழ்த்தி இருந்தால் அதைப்போல ஒரு அடிமுட்டாள்தனமான. பைத்தியக்காரத்தனமான ஒரு செயல் எதுவும் இருக்கமுடியாது. இவரது சாவிற்கூடாக தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் பெறப்போகின்ற அந்தப் பலம் என்பது மிக மகத்தானதென மிக மோசமான இனவாதக் கருத்திற்குள்ளே சிக்கி உணர்விழந்த தயான் எழுதியிருக்கிறார் என்றால் இந்த வீழ்ச்சியினுடைய அந்த வீரியத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று சிங்களத் தேசத்தினுடைய பொய்மை-பொய்யான முடிவுகளை எடுக்கக் கூடிய அந்தச் சூழ்நிலை தராக்கியினுடைய சாவின் காரணமாக மென்மேலும் அதிகரிக்கப்பட்டு இனி ஒருபோதும் தீர்விற்கு வருவதற்கான சகல வாய்ப்புக்களையும் சிங்களம் இழந்துவிட்டது.

எனவே உண்மையில் சிவராமின் இந்தச் சாவிற்கு வேதனைப்பட வேண்டியவர்கள் சிங்களவர்களே யாவார் என்பதே உண்மை என்றார்.



*கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மாமனிதர் சிவராமின் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டோர்.*

## குடாப்பொக்கணையில் இருவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(கொழும்பு)

பொலநறுவை வெலிக்கந்த குடாப்பொக்கணைப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இருவர் காயமடைந்துள்ளனர்.முத்தையா ஆறுமுகம் (வயது-55), அவரது மகன் தவலோகராசா (வயது 25) ஆகிய இருவருமே காயமடைந்து பொலன்னறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். நேற்றுக்காலை பத்து மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்தவர்கள் கருணா குழுவினருக்கு உதவியாக இருக்கலாமென நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## சிவராமின் கொலையயடுத்து தனக்கு கொலை அச்சுறுத்தலாம்

**- சோமவன்ச கூறுகிறார்**

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலையை அடுத்து தமக்குக் கொலைஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். சிவாராமின் கொலைக்கு பின்னால் ஜே.வி.பி இருப்பதாகத் தெரிவித்தே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மூன்று கிழமைகளுக்கு முன்னர் மகரகமவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய விமல் வீரவன்ச மாமனிதர் சிவராம் பற்றி அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் உரையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. விடுதலைப் புலிகளின் கருத்துக்களை பரப்பி வருபவர் சிவராம் என விமல் வீரவன்ச தமது உரையில் குறிப்பிட்டிருந்தார். இதேவேளை கிழக்கு மாகாணத்தில் இருந்து தமது செயற்பாடுகளை ஜே.வி.பி நிறுத்திக்கொள்ள வேண்டும் என சங்கிலியன் படை உத்தரவிட்டுள்ளது. இல்லையேல் விளைவுகள் பாதகமாக இருக்கும் என்றும் அது எச்சரித்துள்ளது. இவ்வாறு கொழும்பில் வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## திருமலையில் அஞ்சலிக் கூட்டம்

(திருகோணமலை)

பிரபல ஊடகவியலாளர் டி சிவராம் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவை, இன்று செவ்வாய்க்கிழமை மாலை திருகோணமலை நகரமண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துகின்றது.

### மாமனிதர்...

பானு அன்னாருக்கு போர்த்தினார். தமிழீழத் தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனினால் அன்னாருக்கு வழங்கப்பட்ட மாமனிதர் கௌரவ விருதுப் பத்திரத்தை கேணல் பானு வாசித்து அவரது குடும்பத்தினரிடம் கையளித்தார். இந்த அஞ்சலி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், அரசியல்துறை துணை பொறுப்பாளர் சோ.தங்கன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மட்டக்களப்பு மாவட்ட தளபதி ராம், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் உட்பட விடுதலைப்புலிகளின் தளபதிகள், போராளிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மர்சூக் அகமட் லெப்பை ஆகியோர் அஞ்சலி உரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டார்கள். பிற்பகல் அங்கிருந்து நேரடியாக மட்டக்களப்பு நகரிலுள்ள அன்னாரின் வீட்டிற்கு புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டு ஒரு மணித்தியாலம் வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. வவுணதீவு இராணுவ முன்னணிக் காவல் நிலைய பிரதேசத்திலிருந்து புகழுடலை வாசகர் வட்டத்தினர் பொறுப்பேற்று அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் சென்றனர். அங்கு வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான பி.அரியநேத்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம், பி.சந்திரசேகரம் மற்றும் எஸ்.சிவநேசன், சுதந்திர ஊடக இயக்க தலைவர் சுனந்த தேசப்பிரிய உட்பட தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களும், எழுத்தாளர்களும் உரையாற்றினார்கள். இதன் பின்பு அங்கிருந்து நேரடியாகப் புகழுடல் ஆலையடிச்சோலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புகழுடல் எடுத்துச் செல்லப்பட்ட வீதிகளிலும், வைக்கப்பட்டிருந்த வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சிறிலங்கா பொலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படை இணைந்ததாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### த.பு.கழக...

ஜோய்பிரான்க் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்தான் என்பதை உறுதிப்படுத்துமாறு பொலிசார் அவரைக் கேட்டுள்ளனர். பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இவர் இன்னார்தான் என்பதை உறுதிப்படுத்தி தொலைநகல் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் மன்னார் பொலிசார் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளதுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழக[illegible]ன் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவரை [illegible]து வாக்குமூலம் தருமாறும் கூ[illegible]புள்ளனர்.

### போர்...

செயற்படுகின்றது. போர்நிறுத்தம் முடிவடைந்துவிட்டது எனக்கூற எமக்கு உரிமையில்லை. அது எமது பொறுப்பல்ல.அந்தப் பொறுப்பு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கேயுள்ளது. நீண்டகாலமாக இருதரப்பினரும் போர் நிறுத்த உடன்படிக்கையைப் பேணி வந்துள்ளனர். அது வலுவானது இவ்வாறான ஒரு சூழ்நிலையில் மீண்டும் யுத்தத்திற்குச் செல்லும் தீர்மானத்திற்குவர எந்தத்தரப்பினருக்கும் தேவை ஏற்படும் எனத்தான் நினைக்கவில்லை எனவும் ஹொக்லண்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

**-சிவராம் கொலை குறித்து 50 பேரிடம்-**

## விசாரணை நடத்தியும் எந்தத் தகவலையும் பெறமுடியவில்லையென்கின்றனர் பொலிசார்

(கொழும்பு)

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் கொலை தொடர்பில் இதுவரை 50 இற்கும் மெற்பட்டவர்களிடம் விசாரணை நடத்திய போதும் எந்தவித தகவலையும் பெறமுடியவில்லை எனக் கொழும்பு பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சலத் லூகொட தெரிவித்துள்ளார்.

மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இவ்வாறு விசாரிக்கப்பட்டவர்களுள் ஊடகவியலாளர் சிவராம் இறுதியாக உணவருந்திய விடுதியின் ஊழியர்களும் அடங்குவர் இந்த நிலையில் சிவராமின் கொலையின்போது காணாமல் போயுள்ள அவரது தொலை பேசியை அடிப்படையாகக் கொண்டும் விசாரணைகள் விரிவாக்கப்பட்டுள்ளது. என அவர் தெரிவித்துள்ளார். (32)

## சிறிலங்காவில் படுகொலையை நிறுத்த சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

**- அமெரிக்கா வாழ் தமிழர் அமைப்பு அறிக்கை**

சிவராமின் படுகொலைக்கு சிறிலங்கா அரசாங்கமே பொறுப்பு. இப்படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வாறான அரச பின்னணியுடன் நடைபெறும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமெரிக்க வாழ் தமிழர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுள்ளது.

அரசாங்கத்தின் பின்னணியுடன் சிறிலங்காவில் அரசியல் எதிரிகள் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்கள் குறித்து சிறிலங்காவிற்கு நீண்ட வரலாறு உண்டு. இது சிறிலங்காவில் சுதந்திரம், சன நாயகம், சட்டம், ஒழுங்கை கேலிக்குள்ளாக்குகின்றது.

அமரர் சிவராம் தலைநகரில் மக்கள் செறிவுள்ள வீதியொன்றில் வைத்துக்கடத்தப்பட்டதும் அவரது உடல் உயர்பாதுகாப்பு ஏற்பாடுகள் கொண்ட பாராளுமன்றத்திலிருந்து ஐநூறு மீற்றர் தூரத்தில் போடப்பட்டிருந்ததும் இந்தப் படுகொலைக்கு அரசாங்கம் பின்னணியில் இருப்பதை எடுத்துக் காட்டுகிறது. நிறுத்தப்படாது தொடர்ந்து கொண்டிருக்கும் தமிழ் அரசியல் வாதிகள் ஊடகவியலாளரின் கொலைகள் தமிழ் தேசியத்திற்கெதிரான ஆயுதக்குழுக்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து பாதுகாப்பளித்து பராமரித்து வருவதையே காட்டுகிறது.

இது யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கும், சனநாயகத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் ஜே.வி.பி.அரசாங்கத்திலிருந்து விலகும்

**-மே தினக் கூட்டத்தில் சோமவன்ச**

சமாதானத்திற்காக என்று சொல்லிக்கொண்ட சனாதிபதியோ, அல்லது வேறு எவரோ விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை எற்படுத்தினால் அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. வெளியேறும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கவிழும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க.தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு எதிராகச் செயற்பட்டால் ஜே.வி.பியின் அரசியல்ப் பயணம் தனித்துத்தொடரும் எனத் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி யின். மேதினக்கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை கொழும்பு பி.ஆர்.சி. மைதானத்தில் இடம்பெற்றபோதே அங்கு பேசிய ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

### மாமனிதர் சிவராமிற்கு..

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைக்க மாமனிதர் சிவராம் அவர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை ஈழநாதம் மக்கள் தினசரி பிரதம ஆசிரியர் பொ. ஜெயராஜ் ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் அவர்கள் அணிவித்தார். மலர்வணக்கத்தினைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

நினைவுரைகளைப் புலிகளின்குரல் வானொலி செய்தியாசிரியர் தவபாலன், எழுத்தாளர் நிலாந்தன் பேரிகை தலைவர் வேழமாலிகிதன், அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே பாலகுமாரன் ஆகியோர் வழங்கினர். தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த ராஜன் இரங்கல் கவிதையினை வாசித்தார்.

மேற்படி வணக்க நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ இளங்குமரன், மற்றும் விடுதலைப் புலிகளின் போராளிகள் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எணப் பெருமளவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது